R. R. No 210/66

7/2

மேழிச்செல்வம்

பராபவ ௵ கார்த்திகை மீ
1966 (நவம்பர் - டிசம்பர்)



விலை 25 பை

அந்தரத்தில் காய்கறித் தோட்டம், கோழிப்பண்ணை.

நிலத்தோடு உள்ள மண்ணில் மட்டும்தான் செடிகள் வளருமா என்ன! அதே மண்ணை மொட்டை மாடிக்கு ஏற்றி அதில் விதையை யூன்றினாலும் முளைக்கிறது, வளர்கிறது, காய்க்கிறது. நீங்கள் படத்தில் காண்பது மொட்டை மாடிமேல் ஏற்படுத்தபபட்டுள்ள ஒரு தோட்டம்தான். மண்ணைத் தாங்கிக்கொண்டிருக்கும் பொருள்களைப் பாருங்கள். மரப்பெட்டி, ஓலைக்கூடை, பழைய கூடைகள் முதலியவை. அவற்றில் எது கிடைப்பது அரிது? இதை என் அந்தரத்தில் தோட்டம் என்றழைக்கக் கூடாது.

இதேமாதிரிதான் கோழிப்பண்ணையும் சுகாதாரத்தைக் கெடுக்காத முறைகளைக் கையாண்டு இதை நடத்தலாம். உங்களுக்கு வேண்டிய காய்கறிகளையும் முட்டையையும் நீங்களே உண்டாக்கலாம்—ஆம் அந்தரப் பண்ணை மூலம்தான்.

உள்ளுரை

	பக்கம்
பருத்திக்குப் பயிர்ப் பாதுகாப்பு ..	5
மரவள்ளிக் கிழங்கு சாகுபடி. ..	7
விதைப்பதற்குமுன் வித்துக்கு மருந்திடுங்கள். ..	10
கேள்வியும் பதிலும் ..	12
புஞ்சை நிலத்திலிருந்து அதிக மகசூல் அடைவதெப்படி? ..	15
நல்ல சாகுபடி, தரமான புகையிலே	16
வானொலிச் செய்திகள் ..	19
தமிழ்நாட்டு வர்த்தகப் பயிர்களின் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் விற்பனை நிலைமைப் பற்றிய விவரங்கள்.	21
தமிழ்நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் திட்டங்கள்—தொடர்ச்சி ..	26
1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை. ..	29

விளம்பரங்கள் :

	பக்கம்
அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரசிங் ஒர்க்ஸ் ..	4
குளிர்கால காய்கறி பயிரிடவே இதுவே தருணம் ..	9
கூப்பர் டீஸல் என்ஜின் ..	14
கிர்போஸ்கர் ஆயில் என்ஜின் ..	18
ரோகோர் ..	25
ராஜா பண்ணைத் தோட்டம். ..	29

மேழிச்செல்வம்

வருடாந்தர சந்தா ..	ரூ. 3·00
தனிப் பிரதி ..	ரூ. 0·25
ஆண்டு மலர் ..	ரூ. 0·50

மார்கழி மாத மேழிச்செல்வம் (டிசம்பர்--ஜனவரி 1966-67)

அகில உலக அரிசி ஆண்டுச் சிறப்பிதழ்.

1966-ம் ஆண்டை அகில உலக அரிசி ஆண்டு என்று சிறப்பிக்கிறோம். உலகெங்கும் இந்த ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தமிழ்கத்தில் 1966, டிசம்பர் 17-ம் தேதி ஆரம்பித்து ஒரு வாரம் அரிசி வாரமாகக் கொண்டாடப்படுகிறது. இதை நினைவிலிருத்தும் வகையில் மேழிச்செல்வம் டிசம்பர்—ஜனவரி மாத சிறப்பிதழாக வெளியிடப்படுகிறது.

அரிசி ஆண்டுச் சிறப்பிதழ் :

62 பக்கங்கள்.

கண்ணுக்கு விருந்தாகும் மூவண்ண அட்டை.

கருத்துக்கு விருந்தாகும் பல்வேறு கட்டுரைகள்—அத்தனையும் நெல் பற்றி.

விலை 50 பைசா.

பயிர் பாதுகாப்பே அபார விளைச்சல்



மருத் பேட்டரி ஸ்ப்ரேயர்

மதிப்பு வாய்ந்த பயிர்கள், பயிர் நாச கிருமிகளாலும், பயிர் நோய்களினலும் நாச மடைவது தேசீய நஷ்டமாகும்.

“ஆஸ்பி”

உபகரணங்கள் அதை நிச்சயமாகவும் திறமையாகவும் தடுக்க வல்லது.



மருத் சார்ஜ் பம்ப்



கேடார்-யுடிலிடி ராகிங் ஸ்ப்ரேயர் ஹைஜெட் டிரிக்கர் இயக்கத்தோடு கூடிய ஸ்ப்ரேகன்
(கேடார்-யுடிலிடி அசைத்தியக்கும் திரவ மருந்து பீச்சும் இயந்திரம்)



ஆஸ்பி ஹாண்ட் ரோடரி டஸ்டர்
(கையினல் சுழற்றும் பௌடர் மருந்து தூவும் இயந்திரம்)

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரசிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மாலாட் :: பம்பாய்-64

போன் : 692331 (5 லைன்கள்)

தந்தி : ‘‘இல்லோகஸ்ட்’’ மாலாட் - பம்பாய்.

சென்னை, மைசூர் ராஜ்ய விநியோகஸ்தர்கள் :

எஸ். வி. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன்.
தபால் பெட்டி எண். 539,
பெங்களூர்-2.

சென்னை காரியாலயம்
நெ. 20, ஒய். எம். சி. ஏ. கட்டிடம்.
வெஸ்ட்காட் ரோடு.
ராயப்பேட்டை, சென்னை-14.

மேழிச்செல்வம்

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

மலர் 23 | பராபவஹூ கார்த்திகைமீ 1966—நவம்பர்–டிசம்பர் | இதழ் 11

பருத்திக்குப் பயிர்ப் பாதுகாப்பு

திரு. சந்தான கிருஷ்ணன், கூட்டு விவசாய நெறியாளர் சென்னை.

எரினும் நன்றும் எருவிடுதல்—கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

என்ற திருவள்ளுவர் வாக்கு பயிர்ப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை நமக்கு வலியுறுத்துகிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தற்போது நல்ல ஊக்கத்துடன் பாடுபடுகிறோம். வளமாக வளர்ந்திருக்கும் பயிர்களைப் பூச்சிகளும் நோய்களும் திடீரென்று தாக்கி அழிக்கும்போது மனத்தளர்வும் வேதனையும் ஏற்படுகிறது.

விவசாய உற்பத்தியில் சுமார் 20 சதவிகிதம் பயிரில் தோன்றும் பூச்சி. நோய்களால் அழிக்கப்படுகிறதென்று கணக்கிடப்பட்டுள்ளது. பூச்சிகளும் நோய்களும் சூழ்நிலைக்குத் தக்கவாறு தங்கள் வளர்ச்சிப் போக்கை மாற்றிக் கொள்ளக்கூடிய அரிய ஆற்றல் படைத்தவை. இதனால் இவைகளை ஒழிப்பதற்காக தடுப்புமுறைகளையும் அவ்வப்போது மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. பயிர்களின் பலவகையான பூச்சிகளையும் நோய்களையும் ஒழிக்க புதியபுதிய மருந்துகள் தற்போது உபயோகிக்கப்பட்டு வருவது உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. எனவே நவீன சாகுபடி முறைகளில் வள்ளுவரின் குறளுக்கிணங்க பயிர்ப் பாதுகாப்பு முக்கிய இடம் பெறுகிறது. வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே சிறந்த முறை. பருத்திப் பயிரைத் தாக்கும் பூச்சி பூசணங்களைப் பற்றியும் அவற்றால் ஏற்படும் சேதத்தின் இயல்பு பற்றியும் விவசாயிகள் தெரிந்துகொள்ள வேண்டாமா!

பூச்சிகள்

பச்சை தத்துப் பூச்சிகள் (Green jassids) கூட்டங் கூட்டமாக இலைகளைத் தாக்கி சாற்றை உறிஞ்சி சுருளச் செய்கின்றன. சில பருவங்களில் அமெரிக்கப் பருத்தியை அதிகமாகத் தாக்குகின்றன. அசுவினி (Aphids) இலைப் பேன் (Thrips) என்ற பூச்சிகள் இலைகளைத் தாக்கி சாற்றைக் குடிக்கின்றன. இதனால் இலைகள் சுருண்டு பழுப்பு நிறமாகும். இலைச்சுருட்டி என்ற பூச்சி இலையைச் சுருட்டி உண்கின்றது. அதிகத் தாக்குதலினால் இலைகள் எல்லாம் உதிர்ந்து விடுவதும் உண்டு. இலைப்புழு பசும் இலைகளைத் தின்று வளர்கின்றது, இதனால் இலைகளின் வடிவு அழியும். இலையுதிர்ச்சியும் ஏற்படும். தண்டுப்புழு தண்டைத் துளைத்து உள்பொருளை உண்டு வளர்கிறது. அதனால் தண்டு வீங்கி பலவீனமடைவதால் காற்று காலத்தில் செடிகள் ஒடிந்துபோகின்றன. இளஞ் செடிகள் பட்டும் போகின்றன. புள்ளிகளையுடைய காய்ப்புழு சிவப்பு காய்ப்புழு (pink boll worm) என்ற இருவகைக் காய்ப்புழுக்கள் உள்ளன. புள்ளிகளையுடைய காய்ப்புழு இளஞ்செடிகளையும் காய்களையும் துளைக்கின்றது. இதனால் செடிகள் வாடும். விதைகள் சொத்தையாகும். பஞ்சு கெட்டுவிடும். சிவப்பு காய்ப்புழு காய்களைத் துளைக்கிறது. முதிராத காய்கள் உதிரும். விதைகள் சொத்தையாகும். பஞ்சில் கறை ஏற்படும். அதனால் பஞ்சின் தரம் குறைந்துவிடுகிறது. பருத்தி நாற்றப் பூச்சி (Stink bugs) காய்களைத் துளைத்து சாற்றை உறிஞ்சிக் குடிக்கிறது. இதனால் பஞ்சு சகட்டு

கறை படிகின்றது. இப்பூச்சிகளின் தாக்குதலினால் மகசூல் குறைவதுடன் பஞ்சின் தரமும் குறைந்துவிடுகிறது. சிலந்திப் பூச்சி (Mites) இலைகளைத் தாக்கி சாற்றினை உறிஞ்சுகிறது. இதனால் இலைகள் பழுத்து உதிர்ந்து விடுகின்றன. இவை தவிர மாவுப் பூச்சி (Mealy bugs) யும் காய் வெடிக்கும் பருவத்தில் தாக்குகின்றது. இப்பூச்சியும் தண்டின் சாற்றை உறிஞ்சுவதால், செடி உலர்ந்து சுருங்கி விடுகிறது.

நோய்கள்

பருத்திச் செடியைத் தாக்கும் பூசணங்கள் பலவகை உள்ளன. வாடல் நோய் (Wilt) வேர்களில் தாக்குண்ட செடிகள் வாடி பட்டுப்போகின்றன. வேர் அழுகல் நோய் (Root rot) தாக்கிய செடிகளின் வேர்கள் அழுகி அவற்றின் மேல்தோல் உரிவதுடன் செடிகள் வாடி பட்டும் போகும். இளஞ் செடி கருகல் அல்லது காய் அழுகல் நோய் தாக்கப்பட்ட இளஞ் செடிகள் மடிகின்றன. இந்நோயில் ஆரம்ப நிலையில் நீர்கசிவு இருக்கும். முற்றிய நிலையில் தண்டு, இலைகள், இலைக் காம்புகள், காய்கள் எல்லாம் பீடிக்கப்பட்டு சிவந்து கொண்டிருக்கும். பாதிக்கப்பட்ட காய்கள் நன்றாக முற்றுவதில்லை. இதனால் விதைகளும் கெட்டுப்போகின்றன. கருங்கிளை நோய் (Black arm) இளஞ் செடிகளின் இலைகளில் செம்புள்ளிகளை உண்டாக்குவதால் இலைகள் காய்கின்றன. வளர்ந்த செடிகளின் இலைகளில் ஈரப்புள்ளிகள் தோன்றும். இலையின் நரம்புகள் சிவப்பாக மாறி இலைகள் வாடி உதிரும். இந்நோயால் தண்டு, மொட்டு, பூ முதலியவையும் தாக்குற்று கருகுகின்றன. தாக்குற்ற பாகங்கள் நசிந்து உதிர்ந்துவிடுகின்றன. சிற்றிலை நோயினால் (Little leaf) தாக்கப்பட்ட செடிகள் வளர்ச்சியின்றி கிளைகள் குறுகி பூக்கள் விடுவதில்லை. பூ விட்டாலும் முழுதாகவோ அல்லது பாதியாகவோ மலட்டுத்தன்மையாய் இருக்கும். இலையும், பூ உறுப்புக்களும் சிறுத்திருக்கும்.

பயிர்களைத் தாக்கும் பூச்சிகளையும் நோய்களையும் ஒழிப்பதற்காகப் பலமுறைகள் கையாளப்படுகின்றன. இரசாயன மருந்துகள் உபயோகிப்பது மிகவும் சுலபமானதும், நிச்சயம் பலனளிக்கக் கூடியதும் சிக்கனமானதுமாகும். எனவே இம்மருந்துகளின் உபயோகமும் விநியோகமும் வருடா வருடம் அதிகரித்து வருகிறது. மேலும் இம் மருந்துகள் செடிகளுக்கோ நிலத்திற்கோ தீமையளிப்பதில்லை. பருத்திச் செடிகள் பூச்சி பூஞ்சண நோயின்றி வளர வேண்டுமானால் கீழ்க்கண்ட தடுப்பு முறைகளைக் கையாள வேண்டும்.

பருத்தியைத் தாக்கும் கருங்கிளை நோயைத் தடுக்க பருத்தி விதைகளை (Agrosan) ''அக்ராசான்'' அல்லது ''செரசான்'' (Ceresan) என்னும் பாதரச மருந்துடன் கலந்து விதைக்க வேண்டும். வளரும் பயிரில் ''ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட்'' (Straptomycin Sulphate) என்னும் ''எதிர் உயிரி'' (Anti-biotic) யையோ அல்லது போர்டோ கலவையோ தெளிக்க வேண்டும்.

பருத்திச் செடி பத்து அல்லது பதினைந்து நாட்கள் வயதுள்ளதாக இருக்கும் பொழுதே நூறு மில்லி லிட்டர் என்டிரின் என்னும் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இப்படி 15 நாட்களுக்கு ஒருமுறை என்டிரினையும் பாரத்தியானையும் மாற்றி மாற்றி செடி பூக்க ஆரம்பிக்கும் வரை அடிக்க வேண்டும். இதன் பிறகு பாரத்தியானையும் ஒரு எக்கராவுக்கு 10 கிலோ கிராம் வீதம் கார்பரில் தூளையும் 5 கிலோ கந்தகத் தூளையும் கலந்து மாற்றி மாற்றி 15 நாட்களுக்கு ஒருதடவை காய்கள் வெடிக்க ஆரம்பிக்கும் வரை அடிக்க வேண்டும். பூ கட்டுவதற்கு முன் அடிக்கும் பாரத்தியானுடன் ஒரு எக்கராவுக்கு $1\frac{1}{4}$ கிலோ கிராம் வீதம் தாமிர பூசண மருந்தையும், பூத்தபின் அடிக்கும் பாரத்தியானுடன் $1\frac{1}{4}$ கிலோ டி. டி. டீ. 50 சதவீதம் கலந்து அடிக்க வேண்டும்.

மாசிப்பட்டத்தில் சாகுபடி செய்யும் பருத்திக்கு கடைசி முறையாக அடிக்கப்படும் கார்பரிலுடன் ஒரு எக்கராவுக்கு சுமார் 5 கிலோ கந்தகத்தூளையும் கலப்பது நல்லது. கருங்கண்ணிப் பருத்தி பூத்து காய் முற்றும் பருவத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை கார்பரில் தூள் தூவுவதன் மூலம் காய்ப்புழுக்களால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கலாம்.

இவ்வாறு மருந்து அடிப்பதனால் தண்டுப்புழு, தத்துப் பூச்சி இலைச்சுருட்டி, இலைப்புழு, அசுவணி நாற்றப் பூச்சி முதலியவை பயிரைத் தாக்காமல் தவிர்க்கலாம். இம்மருந்துகள் முக்கியமான புள்ளிகளையுடைய காய்ப் புழுக்களும் சிவப்பு காய்ப்புழுக்களும் செடியைத் தாக்காமல் தடுக்கின்றன. மேலும் மற்ற பூச்சிகளும் தாக்காது. தாமிர பூசண மருந்து கருங்கிளை, வேர் அழுகல் நோய், காய் அழுகல் போன்ற பூசண நோய்கள் தாக்காமல் தவிர்க்கின்றது. கந்தக மருந்து நோய் வராமல் தவிர்ப்பதுடன் சிலந்திப் பூச்சியையும் தடுக்கிறது.

மேற்கூறிய பயிர் பாதுகாப்பு தடுப்பு முறைகளை மேற்கொள்ளுவோமானால் பருத்திப் பயிர் எவ்வித பூச்சி பூசண நோயின்றி வளரும் என்பதற்கு ஐயமில்லை.



மரவள்ளிக் கிழங்கு சாகுபடி

சாமுவேல் சுந்தரராஜ், தோட்டக்கலை நிபுணர், கோயமுத்தூர்.

நமது நாட்டில் பயிர் செய்யப்பட்டு வரும் பலவகை கிழங்கு வகைகளில் மரவள்ளிக்கிழங்கு முதல் இடம் பெறுகிறது. இது தமிழ் நாட்டில் சுமார் 61,000 ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகின்றது. மரவள்ளிக்கிழங்கில் மாவுப் பொருள் மிகுந்து இருப்பதால் எளிய மக்கள் இதை முக்கிய உணவாகக் கொள்கின்றனர். கேரளத்தில் பெரும்பான்மையான ஏழைமக்களுக்கு மரவள்ளிக் கிழங்கும், மீனும் அரிசிக்குப் பதிலாக முக்கிய உணவாகிறது. தமிழ்நாட்டில் இக்கிழங்கு கன்னியாகுமரி, சேலம், தஞ்சாவூர், கோயமுத்தூர் ஆகிய மாவட்டங்களில் பெரும்பான்மையாகப் பயிர் செய்யப்படுகின்றது. மரவள்ளிக் கிழங்கு மாவு, ஜவ்வரிசி போன்றவை தயார் செய்வதிலும் இன்னும் பலதொழில் துறைகளிலும் பயன்படுகின்றது.

தற்போது நாட்டில் உண்டாகி இருக்கும் உணவுப் பற்றுக்குறையை நீக்குவதற்கு மரவள்ளி, சர்க்கரை வள்ளிக்கிழங்கு ஆகிய மாற்றுணவுப் பயிர்களை அதிக அளவில் பயிர் செய்வது அவசியமாகிறது. ஒரு ஏக்கரில் விளையும் அரிசியிலிருந்து பெறக்கூடிய உணவுச்சத்தைப் போல் மூன்று மடங்குக்கும் அதிகமாக மரவள்ளி பயிரிடுவதால் நாம் பெற முடியும். மேலும், மரவள்ளிக் கிழங்கை மிகவும் சுலபமாகப் பயிர் செய்யலாம். இந்தப் பயிரின் சாகுபடி முறையை இப்பொழுது கவனிப்போம்.

தட்பவெப்ப நிலை:

மரவள்ளி பொதுவாக உஷ்ண மண்டலங்களில் பயிர் செய்யப்பட்டாலும் குளிர் பிரதேசங்களிலும் கூட போதிய உஷ்ணம் இருந்தால் இதைப் பயிர் செய்யலாம். இக் கிழங்கு கடல் மட்டத்திலிருந்து 2,500 அடி உயரம் வரை நன்றாக பயிராகிறது. சாதாரணமாக தாழ்வான பகுதிகளில் செழித்து வளரும். இது வறட்சியை நன்றாகத் தாங்கும் தன்மையுடையது. ஆனால் நிலங்களில் நல்ல வடிகால் வசதி அமைந்திருக்கவேண்டும்.

பெரும்பாலான ஆண்டில் சராசரி 500 முதல் 3,000மில்லி மீட்டர் அளவு மழையுள்ள இடங்களில் மரவள்ளி ஒரு மானாவாரிப் பயிராகச் சாகுபடி செய்யப்படுகின்றது. இறைவை நிலங்களில் பயிரிட்டால் நல்ல விளைச்சலைக் கொடுக்கும்.

செம்மண், மணற்பாங்கான நிலம் போன்ற பலதரப்பட்ட நிலங்களில் மரவள்ளி நன்றாக வளரும். களிமண் நிலங்களில் கிழங்கு வளர்ச்சி தடைபடுகின்றது. இதனால் நல்ல மகசூல் கிடைப்பதில்லை.

தென்மேற்குப் பருவமழை ஆரம்பமாகும் காலமான ஜூன், ஜூலை மாதங்கள் மரவள்ளி நடுவதற்கு ஏற்ற பருவமாகும். மரவள்ளி எட்டு மாதங்களுக்கு மேல் நிலத்தில் இருப்பதால் வடகிழக்குப் பருவமழையும் இப்பயிருக்குப் பலனளிக்கின்றது. இடத்திற்கேற்றவாறு நடும் பருவமும் மாறுபடுகின்றது. தெற்கு மாவட்டங்களில் செப்டம்பர், அக்டோபர் மாதங்களிலும் செங்கற்பட்டு, தென்ஆற்காடு மாவட்டங்களில் இறவை நிலங்களில் டிசம்பர், ஜனவரி மாதங்களிலும் நடப்படுகின்றது.

மரவள்ளி ரகங்கள்

மரவள்ளியில் சுமார் 30 வகைகளுக்கு மேலாக இருக்கின்றன. கோயமுத்தூரிலுள்ள விவசாயக் கல்லூரியில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளில் மலைவெள்ளை, ஆனைக் கொம்பன் ஆகிய இருவகைகள் நாட்டு வகைகளைவிட அதிக மகசூல் கொடுக்கக் கூடியவை என்று தெளிவாகியுள்ளது. இவ்விரு வகைகளும் நாட்டு வகைகளைவிட இரண்டு மடங்கு அதிக மகசூல் கொடுக்கின்றன.

நிலம் தயார் செய்தல்

நிலத்தை மூன்று அல்லது நான்கு முறை நன்றாக உழுது மண் பொலபொலப்பாக்கப்பட வேண்டும். கடைசி உழவிற்கு முன்பாக ஏக்கருக்கு ஐந்து டன் முதல் பத்து டன் வரை தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரம் போடவேண்டும். பின்பு நிலத்தை மூன்றடி இடைவெளி விட்டுப் பார்களாக அமைத்துக்கொள்ள வேண்டும். மானாவாரி நிலங்களில் குழிகளில் நடும் முறை பழக்கத்திலிருக்கின்றது. பாத்திகள் அமைத்தும் இதை நடலாம்.

விதைப்பொருள் — கரணை

மரவள்ளியின் தண்டை 6″ முதல் 9″ நீளமுள்ள கரணைகளாகத் துண்டு செய்யப்படுகிறது. கரணைகள் எடுப்பதற்குத் தண்டுகளின் அடிப்பாகம் முதல் நடுப்பாகம்

வரையே பயன்படுத்த வேண்டும். பாத்திகளிலோ அல்லது பார்களிலோ 3 அடி × 3 அடி இடைவெளி விட்டுக் கரணைகளை நேராக நடவேண்டும். ஏக்கருக்கு 5,000 முதல் 7,000 கரணைகள் தேவைப்படும்.

இறைவை நிலங்களில் கரணைகளை நட்டவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். ஈரத்தைப் பொருத்து மரவள்ளிக் கிழங்குக்கு சுமார் 10 முதல் 15 நாளுக்கொரு முறையாக நீர்பாய்ச்சுதல் நல்லது.

உரமிடல்

மரவள்ளிப் பயிர் நிலத்திலிருந்து அதிக அளவில் சத்துக்களை உட்கொண்டு வளருகின்றது. ஏக்கருக்கு சுமார் 25 கிலோ தழைச்சத்தும் 25–35 கிலோ மணிச்சத்தும் 70 கிலோ சாம்பல்சத்தும் அவசியம். இந்த அளவு பயிர்ச் சத்துக்கள் கிடைக்க இடவேண்டிய உரம் 150 கிலோகிராம் அமோனியம் சல்பேட்டு, 170–220 கிலோ சூப்பர் பாஸ்பேட்டு, 125 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவை. இந்த உரங்களை இரண்டு தடவைகளில் போடலாம். நடும் பொழுது பாதி உரத்தையும், நட்டபின் 60–வது நாளில் இரண்டாம் முறை களை எடுக்கும் பொழுது மற்ற பாதியையும் உரமாக இட வேண்டும்.

களைகளை அவ்வப்போது எடுத்துவிட வேண்டும். மாதத்திற்கு ஒருமுறையாக சுமார் 6 தடவை களையெடுக்க வேண்டும் நட்ட நான்காவது, ஆறுவது மாதங்களில் மண்வெட்டியால் கொத்தி மண் அணைக்க வேண்டும்.

பயிரின் வயது ஏழு முதல் 12 மாதங்கள் வரை தினுசுக்கேற்றவாறு வேறுபடுகின்றது. மரவள்ளி நன்றாக முற்றிய பின் இலைகள் பழுத்து உதிர்ந்துவிடும், கிழங்குகளைத் தோண்டிப் பார்த்தும் கிழங்கின் வளர்ச்சியைக் கண்டு அறியலாம். அறுவடைக்கு முன்பாக நீர் பாய்ச்ச வேண்டும். பிறகு தண்டுகளை வெட்டி அகற்றிவிட்டு கிழங்குகளை மண்வெட்டி அல்லது தோண்டுமுள் ஆகியவற்றில் தோண்டி எடுக்கலாம்.

மகசூல்

மகசூல் நிலத்தின் வளம், மழை, பயிர் செய்யும் முறை ஆகியவற்றைப் பொருத்து இருக்கும். இறவை நிலங்களில் ஏக்கருக்கு சுமார் 5,500 கிலோவும் மானாவாரி நிலங்களில் 2,250 முதல் 2,750 கிலோவரையிலும் மகசூல் கிடைக்கிறது. மலைவெள்ளை, ஆனைக்கொம்பன் ஆகிய உயர்தர ரகங்கள் ஏக்கருக்கு 8,600-லிருந்து 9,000 கிலோவரை மகசூல் கொடுக்கின்றது.

உபயோகங்கள்

மரவள்ளிக்கிழங்கை வேகவைத்து உணவாகக் கொள்ளலாம். இக்கிழங்கிலிருந்து ஜவ்வரிசி, ரவை, செமோலினா, மாவு ஆகியவை தயார் செய்யப்படுகின்றன. சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசி தொழிற்சாலைகள் அநேகம் இருக்கின்றன. தொழில் துறையிலும் மரவள்ளிக் கிழங்கு மாவை பயன்படுத்தும் வாய்ப்புகள் பல உள்ளன. மேலும் தமிழ்நாட்டில் மரவள்ளிக்கிழங்கை சாகுபடி செய்ய வேண்டிய அவசியமும் வசதியும் ஏராளமாக உள்ளன. நல்ல மகசூல் கொடுக்கக்கூடிய உயர்தர வகைகளும் விவசாய இலாகாவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே இக்கிழங்கை அதிக அளவில் நம் விவசாயிகள் பயிர் செய்து உணவுப் பற்றுக்குறையை நீக்க ஒத்துழைப்பார்களாக.



குளிர் கால காய்கறிகளை பயிரிட இதுவே சமயம்



நிலத்திலோ, புழக்கடைத் தோட்டத்திலோ அல்லது மண் சட்டியிலிலோ பயிரிடுங்கள்

நாற்றுகளை நடுங்கள். அல்லது தக்காளி, காலிப்ளவர், காபேஜ் நூல் கோல் விதைகளை விதைத்து நாற்று பயிரிடுங்கள். டூர்னிப் கிழங்கு, முள்ளங்கி, காரட், பீட்ரூட், பசளைக் கீரை விதைகளை விதைத்தாலே போதும்.

புழக்கடையில் காய்கறித் தோட்டத்தை அமையுங்கள்

உணவில் சுய-நிறைவை அடைய உதவுங்கள்

விதைப்பதற்குமுன் வித்துக்கு மருந்திடுங்கள்

கே. சிவராமகிருஷ்ணன், பி.எஸ்சி. (விவ.), மாவட்ட வேளாண்மை அலுவலர், கோயமுத்தூர்.

திருந்திய விவசாய முறைகள் அனைத்திலும், பயிர்ப் பாதுகாப்பு மிகவும் முக்கியமானதாகத் திகழ்கின்றது. மிகுந்த விளைச்சலைத் தரும் உயர்வள வகைகளை விதைகள் கிறோம். அவற்றிற்குத் தேவையான உரங்களை இட்டு, நீர் பாய்ச்சி, களையகற்றி கண்காணிக்கிறோம். இவையெல்லாம் செய்தும் பயிரை நோய்கள் தாக்கினால் நாம் எடுத்துக்கொண்ட மற்ற முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போகின்றன. ஆகவே, பயிர்களைத் தாக்கும் நோய் நொடிகளைக் கட்டுப்படுத்தத் தக்க பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வது அத்தியாவசியமாகிறது. வள்ளுவர் வாக்குப்படியும் தெளிவாகும் உண்மை இதுதான். நல்ல விளைச்சலுக்கு நன்கு உழுவதைவிட நல்ல விதமாக எருப் போடுதல் சிறந்தது. பயிருக்கு நீர் பாய்ச்சுதல் எத்தனை முக்கியமோ அத்தனை முக்கியம் பயிரைப் பாதுகாத்தல். இதைத்தான் "ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின் நீரினும் நன்று அதன் காப்பு"என்றார் வள்ளுவர்.

பயிர்ப் பாதுகாப்பு என்றவுடனே வளரும் பயிரில் காணும் நோய்களைக் கட்டுப்படுத்த மருந்து தெளிப்பதுதான் என்ற எண்ணம் சாதாரணமாக விவசாயிகள் மனதில் எழுகின்றது. பயிர்களைத் தாக்கும் பலநோய் நொடிகள் வித்துக்களிலிருந்து ஆரம்பிக்கின்றன என்பதைப் பலரும் உணராதிருப்பதே இத்தகைய எண்ணத்திற்குக் காரணம். ஆகவே, விதைகளை நிலத்தில் விதைப்பதற்கு முன்பாகவே "பயிர்ப் பாதுகாப்பு" துவங்குகிறது. பயிர்களுக்கு நோய்கள் வருமுன் காப்பதே, விதைகளை மருந்துடன் கலந்து விதைப்பதன் நோக்கமாகும்.

ஆரோக்கியமற்ற, வியாதியுடன் கூடிய விதைகளை விதைத்தால் விதை முளைத்து செடியாக வளர வளர அதனுடன் அவ்விதையிலுள்ள வியாதிக் கிருமிகளும், பூசணங்களும் வளர்ந்து செடியைப் பலவீனப்படுத்துகின்றன. வித்துக்களைத் தக்க மருந்துகளுடன் கலந்து விதைத்தால், அவ்விதைகளிலுள்ள நோயுண்டாக்கும் கிருமிகள் அழிக்கப்படுகின்றன. இதைத் தவிர, விதைத்த பின் மண்ணிலுள்ள கிருமிகளால் வித்துக்கள் பாதிக்கப் படுவதும் தடுக்கப்படுகிறது. விதைகளை மருந்துடன் கலப்பதற்கு ஆகும் செலவு மிகவும் சொற்பம்தான். ஆனால், அதனால் விளையும் பலனோ மிகமிக அதிகம்.

வித்துக்களை, மருந்துடன் கலந்து விதைப்பதில் சில விஷயங்களை விவசாயிகள் மனத்தில் கொள்ளவேண்டும். அதில் மிகவும் முக்கியமானது விதைக்கப்படும் வித்துக்கள். விதைகளில் சிறிதும் ஈரமின்றி நன்கு உலர்ந்த நிலையிருக்க வேண்டும்.

விதைகளை நீரில் ஊறவைத்துப் பின் விதைக்க நேரிட்டால் விதைப்பதற்கு ஒருநாள் முன்னதாகவே விதைகளுடன் மருந்து கலக்கவேண்டும். மறுநாள் விதைகளை நீரில் ஊறவைத்துப் பின் விதைகளை விதைக்கலாம். ஊறவைத்த நீரை கால்நடைகளோ, மனிதர்களோ அண்டாவண்ணம் ஜாக்கிரதையாக அப்புறப் படுத்த வேண்டும். பருத்தி விதைகளை மருந்து கலந்த ஒரு மணி நேரத்துக்குப் பின் சாணம், செம்மண் ஆகியவற்றுடன் கலக்கவும். விதைப்பிற்கு சில மணி நேரங்களுக்கு முன் விதைகளுடன் மருந்தைக் கலந்து விதைப்பதே சாலச் சிறந்ததாகும்.

முக்கியமான பயிர்களுக்கு விதை அல்லது மற்ற நடவு பாகங்களுக்குத் தேவையான மருந்துகளைப் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன:—

நோயைக் கட்டுப்படுத்த தேவையான மருந்து.	தேவைப்படும் மருந்தின் அளவு.
நெல்	
இலைப்புள்ளி நோய், துார் அழுகல் நோய்:	
அக்ரசான், சிரசான், டில்லகீஸ் போன்ற பாதரசக் கூட்டு மருந்துகளுள் ஒன்று.	1 கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து.
சோளம்	
தாளிப்பூட்டை :	
நுண்ணிய கந்தகம்.	1 கிலோ விதைக்கு 4 கிராம் மருந்து.
அல்லது	
அக்ரசான் போன்ற மருந்துகள்.	1 கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து.
பருத்தி	
கருங்கிளை நோய் :	
அக்ரசான் போன்ற மருந்துகள்.	1 கிலோ விதைக்கு 3½ கிராம் மருந்து.
கடலை	
வேரழுகல் நோய் :	
அக்ரசான் போன்ற மருந்துகள்.	7 கிலோ விதைக்கு 1 கிராம் மருந்து.

நோயைக் கட்டுப்படுத்த தேவையான மருந்து.	தேவைப்படும் மருந்தின் அளவு.
காய்கறிகள்	
நாற்றழுகல் நோய் :	
அக்ரசான் போன்ற மருந்துகள்.	400 கிராம் விதைக்கு 1 கிராம் மருந்து.
கரும்பு	
கரிப்பூட்டை செவ்வழுகல், கரணை அழுகல் :	
அரிடான் அல்லது அகலால்.	½ கிலோ மருந்தை 90 லிட்டர் தண்ணீரில் கலந்து கரணைகளை 2–3 நிமிடங்கள் முக்கி, பின் நடவும்.
வாழை	
வாடல் நோய் :	
நனையும் சிரசான்.	½ கிலோ மருந்தை 20 லிட்டர் தண்ணீரில் கலந்து கன்றுகளை முக்கி நடவும்.
உருளைக் கிழங்கு	
கருகல் நோய் :	
அரிடான் அல்லது அகலால்.	1 கிலோ மருந்தை 400 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைக் கிழங்குகளை முக்கி நடவும்.

மிகுந்த விளைச்சலுக்கு அடிப்படைத் தேவை ஆரோக்கியமான பயிர். ஆரோக்கியமான பயிருக்கு ஆதாரமானது வியாதியற்ற ஆரோக்கியமான வித்து. ஆரோக்கியமான வித்துக்களைப் பெற விதைகளை விதைக்குமுன் மருந்துடன் கலத்தல் இன்றியமையாதது. ஆம். விதைப்பதற்குமுன் வித்துக்கு மருந்திடல், வளரும் குழந்தைக்கு அம்மை போன்ற நோய்கள் வராமல் தடுக்க ஆரம்பத்திலேயே தடுப்பு ஊசி போடுவதைப் போன்றது. குழந்தைக்கு அம்மை வந்தால் பார்த்துக் கொள்வோம் என்று யாரும் தடுப்பு ஊசி போடாமல் இருப்பதில்லை. குழந்தையின் ஆரோக்கியத்தில் நமக்கு அக்கறை இருப்பதால் நாம் முன்னெச்சரிக்கையாகவே இருக்க விரும்புகிறோம். அதைப் போலவே விவசாயிகள் பயிர்களின் ஆரோக்கியத்தில் அக்கறை கொண்டு முன்னெச்சரிக்கையுடனிருக்க வித்துக்களை விதைப்பதற்கு மருந்திட்டு விதைக்கவேண்டும்.

எனவே, மீண்டும் நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள் "பயிர்களைத் தாக்கும் வியாதிகளை, வந்தபின் காப்பதைவிட வருமுன் காத்தலே சிறந்தது."



கேள்வியும் பதிலும்

எம். கே. லிங்கையா, விரிவினை வல்லுநர்; கே. எஸ். குட்டி முதலியார், உதவி விரிவினை வல்லுநர்;
த. சோமசுந்தரம், விரிவினை விளக்குநர்.

[விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெற, கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் "மேழிச்செல்வம், கேள்வியும் பதிலும்" விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயமுத்தூர்-3, என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

திரு. P. தனக்கோடி, பட்டவாய்த்தலை

வினா: நாட்டு வெங்காயத்திற்கு விதை உண்டா? நாம் சாப்பிடும் பகுதி கிழங்கா அல்லது இலையா?

விடை: நாட்டு வெங்காயத்திற்கு விதையுண்டு. ஆனால் சாகுபடி செய்ய வழக்கமாக வெங்காயத்தையே விதைப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. வெங்காயத்தில் உண்ண பயன்படும் பகுதி இலைதான்.

வினா: 'ஹேண்ட் பம்ப்' ஒன்றை உபயோகிப்பதன் மூலம் சுமார் எத்தனை ஏக்கர் சாகுபடி செய்ய முடியும். அதன் விலை என்ன? கிடைக்கும் இடம், எத்தனை அடி உயரம் வரை தண்ணீரை அதன் மூலம் இறைக்கலாம் என்ற விபரங்களை தெளிவாக குறிப்பிடவும்.

விடை: இது குறித்து ஏற்கனவே மேழிச் செல்வத்தில் வெளியிடப்பட்டுள்ளது. குறைந்த ஆழத்திற்கு நீர் இறைக்கும் பம்ப் (Low Lift Pump)பைக் கொண்டு நாள் ஒன்றுக்கு அரை ஏக்கர் நீர் பாய்ச்சலாம். இதன் சுமாரான விலை ரூ. 180. இது 16 முதல் 18 அடிவரை நீர் இறைக்கப் பயன்படும். இதற்கு "விவசாய அபிவிருத்திக் கழகம் (Agricultural Development Society), நைனி அஞ்சல், அலகாபாத் மாவட்டம், உத்திரப்பிரதேசம்" என்ற முகவரிக்கு எழுதவும்.

திரு S. கோவிந்தசாமி பிள்ளை, கும்பகோணம்.

வினா: நீர் ஊற்று இருக்கும் இடத்தை கண்டுபிடிக்கக் கூடிய (Spring finder) கருவி ஏதாவது உண்டா? அப்படி யிருந்தால் அது எங்கே யார் மூலம் அடையலாம்?

விடை: பல கருவிகளைக் கொண்டு நீர் ஊற்றுக் கண்டு பிடிக்கிறதாகக் கேள்விப்படுகிறோம். நம் விவசாய இலாகாவின் அதிகார வரம்பில் ஒப்புக்கொள்ளப் பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நீர் ஊற்றுக் கண்டு பிடிக்கும் கருவி இல்லாததால் தங்கள் கேள்விக்கு அதிகாரபூர்வமான விடை கொடுக்க முடியவில்லை.

திரு. O. S. பழனிச்சாமி, ந. உடையாம்பாளையம்.

வினா: வாழை மகசூலை வாழைப்பழ ஏற்றுமதிக் கார்ப்பரேஷன் மூலம் கொள்முதல் செய்யப் போவதாகக் கேள்விப்பட்டேன். எப்பொழுது அந்த ஏற்பாடு அமுலுக்குக் கொண்டு வரபபடும்? எந்த வகை வாழை ஏற்றுக்கொள்ளப்படும்?

விடை: இது விஷயமாக, "நெறியாளர், வாழைப்பழ ஏற்றுமதி கார்ப்பரேஷன், சென்னை-6" என்ற விலாசத்திற்கு எழுதி மேற்படி விபரங்களைத் தெரிந்து கொள்ளவும்.

வினா: 'ஜிங்க் காப்பர்' என்பது நுண்ணுணவுச் சத்தா குமா?

விடை: ஜிங்க்கும், காப்பரும் நுண்ணுணவுச் சத்துக்களே.

வினா: பல பெயர் கொண்ட ஒரு மருந்து இருப்பதால் எங்களுக்குக் குழப்பமாக இருக்கிறது (e.g.) போர்டோ மிக்சரை வெட்காப்பர் என்றும் குப்ரா வெட் என்றும் பச்சை மருந்து என்றும் சொல்கிறார்கள். இவ்வாறு சொல்லப்படுவதால் கைவசமுள்ள மருந்தையே ஒரு விளக்குநர் போர்டோ மிக்சரை வேறு பெயரில் குறிப்பிட்டு சொன்னால் நாங்கள் திரும்ப வாங்க வேண்டியிருக்கிறது. ஆகையால் இக்குழப்பம் ஏற்படாமல் இருக்க ஒவ்வொரு மருந்துக்கும் உள்ள பல பெயர்களையும் உபயோகக் குறிப்புகளும் தயவு செய்து விளக்க முடியுமா?

விடை: போர்டோ கலவை என்பது சுண்ணும்பையும் மயில் துத்தத்தையும் கொண்டு நாமாக தயாரிக்க வேண்டிய நோய்க்கொல்லி மருந்து. ஏனைய மருந்துகள் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டு நீரில் கரைத்து உடனடியாக உபயோகிக்க ஏற்ற நிலையில் உள்ள வெவ்வேறு மருந்துகளாகும்.

பூச்சி மற்றும் நோய்க்கொல்லி மருந்துகள் ஏராளமாக உள்ள நிலையில் ஒவ்வொன்றைப் பற்றியும் விபரமாக இவ்விடத்தில் தெரிவிக்க இயலாது. உங்கள் விவசாய விரிவு அலுவலரிடமிருந்து இவ் விபரங்களை அறிந்து கொள்ளவும். பொதுவாக மருந்து வாங்குவதற்கு முன்பே உங்களிடம் கைவசமுள்ள மருந்துகளின் விபரத்தை விவசாயக் கிடங்கு அலுவலருக்குத் தெரிவித்து தேவையான மருந்தை மட்டுமே வாங்கும் முறையை நீங்கள் கடைபிடிக்கலாம்.

வினா: மருந்து தெளித்த எத்தனை நேரத்தில் மழை பெய்தால் மருந்து உபயோகம் இல்லாமல் போய்விடும்?

விடை: மருந்தடித்து 24 மணி நேரத்திற்குள் $\frac{1}{4}$ அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவு மழை பெய்தால் மீண்டும் மருந்தடிக்கவும். பி.எச்.சி. மருந்துக்கு அவை உலர்ந்து ஒட்டிக்கொள்ள 10 மணி நேரம் போதுமானதாக முடிவு செய்யப்பட்டுள்ளதால் அதற்குப்பிறகு $\frac{1}{4}''$ அல்லது அதற்குச் சிறிது மேற்பட்ட மழை பெய்தால் மீண்டும் மருந்தடிக்கத் தேவையில்லை.

திரு. V. கிருஷ்ணன், சிறுவழஞ்சி.

வினா: G.E.B. 24 என்ற நெல்லும் A.S.D. 11 என்ற நெல்லும் ஒரே நெல்லா? அல்லது தனித்தனி நெல்லா? தனித்தனி நெல்லானால் எந்த நெல் அதிக மகசூல் தருகிறது? சாகுபடிக்கு எந்த நெல் சிறந்தது? ஒரே நெல்லானால் அந்த நெல் நல்ல நெல்லா? சாகுபடிக்கு சிறந்த நெல்லா? அதிக மகசூல் கொடுக்கிறதா?

விடை: ஜி. இ. பி. 24 என்டதை கிச்சிலி சப்பா என்று வழங்குவர். இதன் வயது 150 நாட்கள். இதனை ஜூன்–ஜூலை முதல் நவம்பர்–டிசம்பர் மாதங்கள் வரையுள்ள பருவத்தில் மாநிலம் முழுவதும் பயிர் செய்யலாம். இது சராசரியாக ஏக்கருக்கு 3,500 ராத்தல் மகசூல் கொடுக்கும்.

ஏ. எஸ். டி. 11 என்பது 'வீரியக் கிச்சிலி'யாகும். இதன் வயதும் 150 நாட்களே. இது ஏக்கருக்கு சராசரியாக 4,920 ராத்தல் மகசூல் தரவல்லது. இது திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்களில் பெருமளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

வினா: சோளம், ராகி, மிளகாய் (செடி), உளுந்து, கொள்ளு, கம்பு, வாழை, பட்டாணி முதலிய பயிர்களுக்கு மிகமிக ஏற்ற மண்கள் எவை?

விடை: அதிகக் களராக உள்ள மண், களிமண் ஆகியவைகள் தவிர மற்ற பூஞ்செவல், இளஞ்செவல், கடுஞ்செவல், இருபாட்டு மண் ஆகியவைகள் நல்ல உரமிட்டபின் மேற்சொன்ன பயிர்களுக்கு மிகவும் ஏற்றவை. வடிகால் வசதியாக இருத்தல் வேண்டும். நீர்ப்பிடிப்பு இருப்பின் வடிகால் வசதி செய்யவும்.

வினா: நம் மாகாணத்தைப் பொறுத்தவரையில் அங்கே சாகுபடியாகும் ஒவ்வொரு பயிருக்கும் மிக ஏற்ற மண் என்ன?

விடை: முந்தின வினாவுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் விடை இதற்கும் பொருந்தும். மற்றும் கிழங்கு வகைகளுக்கு படுகை மண்ணும், மேலே சொன்ன வகை மண் இரண்டு அடி அல்லது அதற்கு மேல் ஆழமுள்ள மண் மிகவும் ஏற்றது. இன்னும் வேறு ஏதாவது பயிருக்குத் தனியான விவரம் வேண்டின் விவரமாக எழுதவும்.

வினா: கோ. 25 என்ற நெல்லை நாற்றுப் பாவுதற்கு என்ன என்ன முறைகளை கையாள வேண்டும்?

விடை: கோ. 25 நெல் விதைகளையும் ஏனைய நெல் வித்துக்களைப் போலவே அக்ரசான் அல்லது செரசான் போன்ற மருந்துகளுடன் ஒரு ராத்தல் விதைக்கு ஒரு கிராம் மருந்து என்ற அளவில் கலந்து உப்பு நீரில் போட்டு மிதக்கும் லேசான மற்றும் பதர்களையும் நீக்கி, அடியில் தங்கியுள்ள நல்ல தரமான விதைகளைச் சேகரித்து, பின்னர் 'முளை கட்டி' வைத்து, அடுத்த நாள், ஏக்கருக்கு 10,000 ராத்தல் பசுந்தழை என்ற அளவில் போட்டு நன்றாக பரம்படித்து தயாராக வைத்துள்ள செண்ட் நாற்றங்கால்களில் ஒவ்வொரு நாற்றங்காலிலும் 3 ராத்தல் விதை வீதம் சீராக விதை பாவவும்.

WALCHAND
COOPER
GROUP

கூப்பர் டீஸல் எஞ்ஜின்



உங்களுக்கு வேண்டியபோது,
வேண்டிய இடத்திற்கு
தண்ணீர்,
கொண்டு வருகின்றன.

கூப்பர் இஞ்ஜினீயரிங் லிமிடெட்,
ஸேல்ஸ் ஆபீஸ்: 658, டெக்கான் ஜிம்கானா,
புனா-4.

CE. 6385 TAM.

புஞ்சை நிலத்திலிருந்து

அதிக மகசூல் அடைவதெப்படி?

திரு எஸ். இராமசுப்ரமணியம், பி.ஏ., பி.எஸ்ஸி. (விவசாயம்), மாவட்ட வேளாண்மை அலுவலர், சிவகங்கை.

திரு எம். இராமச்சந்திரன், பி.எஸ்ஸி., (விவசாயம்) பருத்தி அபிவிருத்தி உதவியாளர், சிவகங்கை.

புஞ்சை நிலங்களை எப்படி நல்ல முறையில் லாபம் தரும் வகையில் பயன்படுத்துவது என்பது ஒரு மிகச் சிக்கலான பிரச்சினையாகும். விவசாயத்திற்கு தண்ணீர் கிடைப்பது அரிதாக இருக்கும் நமது நாட்டில் புஞ்சை நிலங்களிலிருந்தும் அதிக மகசூல் அடைய நாம் முயற்சி செய்ய வேண்டும். எவ்வாறு புஞ்சை நிலங்களிலிருந்து அதிக மகசூலடைவது என்பது கேள்வி. இந்தக் கேள்விக்கு 'பருத்தியை ஊடு சாகுபடியாக பயிர் செய்வது' என்பது கிடைக்கக்கூடிய பதில்களில் ஒன்றாகும்.

புஞ்சை நிலங்கள் மழை பெய்யும் மூன்று அல்லது நான்கு மாதங்களில் மட்டும் சாகுபடி செய்யப்படுகின்றது. இக் காலங்களில் நம் விவசாயிகள் புஞ்சை தானியங்கள் அல்லது மற்ற புஞ்சைப் பயிர்கள் ஏதாவது ஒன்றைப் பயிர் செய்கின்றனர். இந்த சாகுபடி முடிந்தபின், மற்ற காலங்களில் புஞ்சை நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. மேலும் சில மாதங்கள் சாகுபடியின்கீழ் இருக்க பருத்தியை ஊடு சாகுபடியாக பயிரிடுவதை விவசாய இலாக்காவினர் சிபாரிசு செய்து வருகின்றனர். இதன் மூலம் நாம் புஞ்சை நிலங்களை மேலும் சிறிது காலத்திற்கு பயன்படுத்தலாம். ஒன்று அல்லது இரண்டு மாதங்கள் வரை வறட்சியைத் தாங்கக்கூடிய சக்தியை உடையது பருத்தி. எனவே ஊடுபயிர், சாகுபடிக்கு இது சிபாரிசு செய்யப்படுகிறது. மேலும் இந்த நாட்களில் ஓரிரு முறைகள் மழை பெய்யுமானால், பருத்திச் செடியை மேலும் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு விட்டுவைக்கலாம்.

பருத்தியை ஊடுபயிராக பயிர் செய்யும் முறை

மண்வளம் நல்ல கரிசலாகவும், அத்துடன் மழையும் சுமாராக பெய்யக்கூடிய இடங்களில் ஒவ்வொரு 5 அல்லது 6 வரிசை பிரதம பயிருக்கு இடையில் ஒரு வரிசை பருத்தியை ஊடுபயிராக பயிராக்கலாம். மண்வளம், சிறிது மணற் சார்பாகவும் மழை குறைவாகவும் உள்ள இடங்களில் இவ்விடைவெளி 10 முதல் 15 அடி வரை விடப்பெறுதல் வேண்டும். பிரதமப் பயிர் எப்பயிராக வேண்டுமானாலும் இருக்கலாம். அது நிலக்கடலையாகவோ எள்ளாகவோ கேப்பை அல்லது கம்புப் பயிராகவோ இருக்கலாம். இப் பயிர் எப்பயிராக இருந்தாலும் அதனுள் பருத்தியை ஊடுபயிராகப் பயிர் செய்யலாம்.

நிலமானது பிரதம பயிருக்காக நேர்த்தி செய்யப்படுகின்றது. உரமிடுதல் போன்ற மற்ற விஷயங்களும் பிரதம பயிருக்காகவே செய்யப்படுகிறது. எனவே, இந்த ஊடுபயிர் சாகுபடிக்காக தனிப்பட்ட செலவு அதிகமில்லை. ரூ. 2 முதல் 3 வரை விதைக்கென்று செலவாகும். ஊடுபயிர் சாகுபடி செய்வதற்கு 2 கிலோ பருத்தி விதை போதுமானதாகும். ஊடுபயிரில் வரிசையினுள் செடிக்குச் செடி 1 அடி 6 அங்குலம் முதல் 2 அடி வரை இடைவெளி விடலாம். ஊடுபயிர் சாகுபடியில் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் யாதெனில், இந்த ஊடுபயிரை வரிசைகளில் விதைக்க வேண்டும். அப்பொழுது பிரதம பயிர் அறுவடைக்குப்பின் இந்த ஊடுபயிரை தனியாக வளரவிடுதல் சௌகரியமாயிருக்கும். விதைக்கு ஆகும் செலவைத் தவிர பருத்திக்காய் வெடித்தவுடன் அதிலிருந்து பஞ்சு எடுக்கும் செலவு, இந்த ஊடுபயிர் சாகுபடியிலாகும் மற்றொரு செலவாகும். ஆனால் இது மிகக்குறைவான செலவாகும்.

சென்னை மாகாணத்தில் ஊடுபயிராக சாகுபடி செய்வதற்கு கே. 6, எம்.சியு. 1 மற்றும் எம்.சியு. 3 ரக பருத்தி விதைகள் சிறந்தது. பருத்தியை ஊடுபயிராகச் சாகுபடி செய்வதின் மூலம், நாம் புஞ்சைகளை நல்ல முறையில் பயன்படுத்த முடியும். நமக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். அதோடு நமது நாட்டின் பருத்தி உற்பத்தி அதிகமாகும் இந்த வித ஊடுசாகுபடியால் எக்கருக்கு ரூ. 20 முதல் 25 வரை அதிக வருமானம் கிடைக்கும்.

திருந்திய சாகுபடி, தரமான புகையிலை.

பி. கருப்பண்ணன்,
மாவட்ட வேளாண்மை அலுவலர், பொள்ளாச்சி.

தமிழ்நாட்டில் புகையிலை சுமார் 42,500 ஏக்கரா விஸ்தீரணத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. முக்கியமாக வாய்ப்புகையிலை தினுசுகளும், சுருட்டுப் புகையிலை தினுசுகளும்தான் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. புகையிலை தமிழ்நாட்டில் தோட்டங்களில் பொதுவாக செப்டம்பர் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை சாகுபடி செய்யப்படுகிறது.

சாகுபடிப் பருவம்

சாதாரணமாக புகையிலை நாற்றங்கால்கள் ஜூலை மாதக் கடைசியிலிருந்து நவம்பர் முதல் வாரம் வரை தயார் செய்யப்படுகின்றன. நாற்றுக்களை 6 வாரத்திலிருந்து 8 வாரங்கழித்த பின் நடவு செய்யப்படுகிறது. சாதாரணமாக நட்டபின் தினுசுகளுக்குத் தகுந்தாற்போல் 105 நாட்களிலிருந்து 120 நாட்களுக்குள் அறுவடைக்குத் தயாராகிறது. டிசம்பரிலிருந்து மார்ச்—ஏப்ரல் வரை அறுவடை செய்யப்படுகின்றது.

நாற்றங்கால் தயார் செய்யும் முறை

ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய சுமார் ஒரு செண்ட் நாற்றங்கால் நிலம் தேவை. 5 செண்டுக்கு ஒரு வண்டி வீதம் நல்ல மக்கின தொழு உரம் போட்டு உழவு செய்யவேண்டும், நாற்று விடப்படும் மேடைப் பாத்தியின் அளவு 2.5 மீட்டர் நீளமும், ஒரு மீட்டர் அகலமும் இருக்கவேண்டும். 9 அடி நீளமும் 4 அடி அகலமும் பாத்தியைச் சுற்றி 20 சென்டி மீட்டர் அகமுள்ள வாய்க்கால் விடவேண்டும். மேடைப் பாத்தியின் உயரம் 15 சென்டி மீட்டர் இருக்கவேண்டும். இம்மாதிரி சுமார் 8 பாத்திகள் ஒரு ஏக்கர் நடுவதற்குத் தேவை. பாத்திகளை மேற்கூறிய வாறு அமைத்தபின் நன்ருகப் பொடி செய்து சலிக்கப்பட்ட தொழு உரத்தை போட்டு கையினல் இலேசாகத் தட்டி அமுக்கிவிடவேண்டும், ஒரு பாத்திக்குச் சுமார் 1·5 கிராம் விதையை சம அளவில் நுண்ணிய மணலுடன் கலந்து சமமாகத் தெளிக்கவேண்டும். விதைத்தபின் சாணி உரத்தை இலேசாக விரல்களால் கிளறி விட வேண்டும். பிறகு ஒரு இரும்புக் குழாய் கொண்டு இலேசாக உருட்டி விதைகளை மறையச் செய்யலாம். விதைத்த பின் நேரடியாகத் தண்ணீர் விடாமல் பூவாளியில் தினசரி ஐந்து தடவை வீதம் சுமார் மூன்று வாரத்திற்கு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

நாற்றங்கால்கள் பெரும்பாலும் "அழுகல் நோய்" என்ற பூஞ்சான நோயால் தாக்கப்பட்டு சேதமடைகின்றன. இந்த நோயைத் தடுக்க 3-வது, 4வது வாரங்களில் அரை சதவீதம் போர்டோ கலவை அல்லது ஒருசத தாமிரம் பூஞ்சான மருந்து கரைசலைத் தெளிக்கவேண்டும். மப்பு மந்தாரமாக இருந்தால் வாரத்திற்கு ஒரு தடவை மருந்து தெளிக்கவேண்டும்.

நடவு செய்யப்படும் நிலத்தின் தயாரிப்பு

மண் நன்ருகப் பண்படும்படி பல தடவை உழவு செய்தபின் ஏக்கர் ஒன்றுக்கு நன்ருக மக்கின 40 வண்டி தொழு உரம் அல்லது கலவை உரத்தை இடவேண்டும். நாட்டுக் கலப்பையால் உழுது எருவை நிலத்தில் நன்ருக கலக்கச் செய்யவேண்டும். ஏரி அல்லது ஒரு குளத்து வண்டல் ஏக்கர் ஒன்றுக்கு 50 முதல் 100 வண்டி முன் உரமாக இடலாம். தரமான புகையிலை கிடைக்க ஆட்டுக்கிடையும் வைப்பது நலம். கிணற்றுத் தண்ணீர் உப்பாக இருந்தால் தரமான புகையிலை கிடைக்கும்.

நடவு செய்தல்

மாலை வேளையில் நாற்றுக்களை ஒரு மீட்டர் இடைவெளி இரு வரிசைகளிலும் இருக்கும்படி பாத்திகளில் நடலாம்.

இடைச்சாகுபடி முறைகள்

நடவு செய்து 14 நாட்களுக்கு பின் களைக்கொத்து கொண்டோ, சிறிய மண்வெட்டி கொண்டோ களையெடுக்க வேண்டும். 25-லிருந்து 30 நாட்கள் கழித்து இரண்டாவது மண்வெட்டிக் களையும், 50-லிருந்து 60 நாளைக்குள் மூன்ருவது மண்வெட்டிக்களையும் எடுத்து மண் அணைத்து பாத்திகள் அமைக்கவேண்டும்.

நீர்ப்பாய்ச்சுதல்

மூன்று நாட்களுக்கு ஒரு முறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும், முதல் களைக்குப் பின் ஒரு வாரம் மண்ணை உலரவைப்பது நலம் என்பது கோவை விவசாயிகளின் கருத்து. நட்டு சுமார் 65-லிருந்து 70 நாளைக்குள்

கொழுந்து ஒடிப்பது முக்கியமான செயலாகும். பிறகு வாரத்திற்கு ஒருமுறை கிளம்பும் சிம்புகளையும் அகற்ற வேண்டும். சுமார் 5-லிருந்து 6 சிம்புகள் எடுக்க வேண்டும். கோவை மாவட்டத்தில் வாழைக்கப்பல், வட்டக்கப்பல் வகைகளில் 7-வது இலைக்கு மேல் கொழுந்து ஒடிப்பது உண்டு.

இரசாயன உரமிடல்

நட்ட பயிரில் சுமார் 15 நாளைக்குள் அதாவது முதல் களை எடுத்தவுடன் இரண்டாம் நம்பர் ஸ்டாண்டர்டு மிக்சர் கலப்பு உரத்தை 200 கிலோ அளவில் செடியிலிருந்து 10 சென்டி மீட்டர் அளவு தள்ளி சுற்றி விட்டு மண்ணில் கலக்கச் செய்து உடனே தண்ணீர் பாய்ச்ச வேண்டும். சில இடங்களில் இதை இரண்டு தடவைகளில் முறையே 15–வது நாளிலும், 30-வது நாளிலும் இடுகிறார்கள்.

யூரியா, சல்பேட், கால்சியம் அமோனியம் நைட்ரேட் போன்ற உரங்களை நட்டபின் சுமார் 45-வது நாளையில் முறையே 50 கிலோ 100 கிலோ அளவில் முன் கூறியது போல் செடிகளைச் சுற்றி வைத்து நீர்ப்பாய்ச்ச வேண்டும். இவைகளை இரண்டு தடவையாக முறையே 30 நாளையிலும் 50 நாளையிலும் இடலாம்.

பயிர்ப் பாதுகாப்பு

புகையிலை பெரும்பாலும் அசுவினி, பேன், இலை வெட்டுப் புழு முதலியவற்றினும் நாற்றங்காலில் தண்டுப்புழு, நிமோட்டொடு என்ற ஒருவகைப் புழுவினாலும் பாதிக்கப்படுகிறது.

தடுப்பு முறைகள்

என்டிரின், பாராத்தியான், பாலிடால் முதலிய மருந்துகளை தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். சுமார் நான்கு தடவை மருந்து தெளிக்கவேண்டும். நடவு செய்த சுமார் 20-வது நாளிலிருந்து பிறகு 20-நாள் இடைவெளிவிட்டு 80-வது நாள் வரை தெளிக்கலாம். அறுவடைக்கு ஆறுவாரங்களிருக்கும் போது மருந்தடிப்பதை நிறுத்திவிடவேண்டும்.

புகையிலை பயிரை பல நோய்கள் தாக்கி மகசூலையும் தரத்தையும் குறைக்கின்றன.

புகையிலை புள்ளிநோய், பொரியான் துண்டுக்கருப்பு நோய் போன்றவை பூஞ்சானங்களால் உண்டாகின்றன. இவைகளைக் கட்டுப்படுத்த பூச்சி மருந்துகளுடன் ஒவ்வொரு தடவையும் 250 கிராம் மயில் துத்தக் கலவையை கலந்து தெளிக்கலாம்.

சாம்பல் நோயைத் தீர்க்க செடிகளுக்கு இடையில் ஏக்கர் ஒன்றுக்கு 15 கிலோ கந்தகத் தூள்களைத் தூவலாம். இவை தவிர வைரசினாலும் சுருட்டை இலை (Leafcurl) முருணை (Mossail) மேல் நோய் முதலியவை உண்டாகின்றன. இதற்கு தடுப்பு மருந்து இல்லை. நோயால் தாக்கப்பட்ட செடிகளை அவ்வப்பொழுது அகற்றி அழிப்பதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

புகையிலைச் செடியின் சத்தை உறிஞ்சி வளரும் புல்லுருவி (புகையிலைக்காளான்) யும் சில இடங்களில் தென்படுகிறது. காளான் முளைத்து 3" அல்லது 4" வெளியே தெரிந்தவுடன் பறித்து எறிந்துவிட வேண்டும்.

புகையிலை தினுசுகள்

மதுரை மாவட்டம் வேடசந்தூர் புகையிலை ஆராய்ச்சிப் பண்ணையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்க்கண்ட பொறுக்கு விதைகளை இடத்திற்குத் தகுந்தாற்போல் உபயோகிப்பதன் மூலம் விளைச்சலில் சுமார் 10-லிருந்து 15 சதவீதம் அதிக மகசூல் அடையலாம்:—

வாழைக்கப்பல்	..	..	1–115, 1–119
வட்டக் கப்பல்	..	..	வி. டி. கே. 1.
வடமுகம்	..	..	வி. டி. 1
பெரிய வடமுகம்	..	..	பி. வி. 7
மொன்னை	..	..	1–64
ஊசிக்கப்பல்	..	..	1–737
சுருட்டு உள்புகையிலை		..	கே. வி. 1
சுருட்டு பைண்டர்	..	..	கே. வி. 10

தமிழ்நாட்டில் புகையிலையை வரப்பு புகையிலை, குழிப்புகையிலை, யாழ்ப்பாண முறை, முதலிய முறைகளைக் கையாண்டு பதம் செய்து விற்பனை செய்கிறார்கள்.

புகையிலை தீவிர சாகுபடித் திட்டம் கோவை மாவட்டத்தில் அவினாசி, கோபி, பல்லடம் தாலுக்காக்களில் அமுலில் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் சாகுபடிதாரர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 425 வீதம் கடனாக வழங்கப்பட்டு இரசாயன உரம், பூச்சி மருந்துகள் வாங்க ரூ. 150-ம் ரூ. 275 ரொக்கமாகவும், கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சராசரி விளைச்சல் 13.80 சதவீதம் 1964-65ல் மட்டும் அதிகமாகியுள்ளது. ஒரு ஏக்கராவிற்கு 40 கிலோ கொண்ட 2-ம் நெம்பர் கலப்பு உரம் 5 மூட்டைகளும் ஒரு மூட்டை (100 கிலோ) அமோனியம் சல்பேட்டும், ரூ. 30 மதிப்புள்ள பூச்சி மருந்துகளை ரூ. 15 மதிப்பில் அரை விலையிலும் கொடுக்கப்பட்டு இத்திட்டம் மேட்டுப்பாளையத்தைத் தலைமை இடமாகக் கொண்டு ஒரு தனிமாவட்ட வேளாண்மை அதிகாரியின்கீழ் வெற்றிகரமாக நடந்து வருகின்றது.

எல்லா புகையிலை விவசாயிகளும் இந்த முன்னேற்ற முறைகளைக் கையாண்டு புகையிலை உற்பத்தியை கணிசமாக அதிகப்படுத்துவதன் மூலம் நாட்டிற்கும் பெரிய சேவை செய்து தங்கள் வருவாயையும் பெருக்கிக் கொள்ளலாம்.

BAY KOEL/TM-4/64
என்ஜின்கள் - விவசாயிகளால்
பெருமை-
யுடன்
பேசப்படு-
பவை...!
Kirloskar
REGD. TRADE-MARK
டீஸல்
என்ஜின்கள்
விவசாயத்திற்கு
எவி 1 5 ஹார்ஸ் பவர்
டீஸல் என்ஜின்கள்
மலிவான விலை
நம்பத்தகுந்தது
செலுத்துவதும் நிர்வாகமும் சிக்கன மானது
சுலபமாகக் கையாளக்கூடியது
எளிதில் நிறுவக்கூடியது
தொந்திரவற்ற சேவை
கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ் லிட்., பூனா-3



வானொலிச் செய்திகள்

அன்புடையீர்,

வானொலி நிகழ்ச்சிகளில் நீங்கள் அதிக பங்குகொண்டு பலனடைந்து வருவது கண்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பெண்கள் வானொலி மன்றங்களும் பல இந்த ஒலிபரப்புகளை மிகவும் ஆர்வத்துடன் கேட்டு வருகின்றன என்பது பெருமை தரும் விஷயமாகும். சென்ற மாதம் சென்னை வந்திருந்த பண்ணைச் செய்தி ஸ்தாபன இயக்குநர் அவர்கள் தமிழ்நாட்டில் விவசாய வானொலி நிகழ்ச்சிகள் நல்ல முறையில் நடந்து வருகின்றன வென்றும், விவசாயிகள் இதனை விரும்பிக் கேட்டு வருவது பாராட்டுக்குரியதாகு மென்றும் உளமுவந்து கூறினார்கள்.

பயிர்ப் பாதுகாப்பு முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் கூற வானொலி தவிர வேறு சாதனங்கள் உண்டா என்று ஒரு மன்றம் கேட்டிருப்பதிலிருந்து விவசாய ஒலிபரப்புகள் உங்கள் அபிமானத்தை எவ்வளவு தூரம் கவர்ந்துள்ளன என்பது தெளிவாகிறது. வானொலி போன்ற மிகவும் சக்தி வாய்ந்த தகவல் சாதனம்தான் கூற வேண்டிய விஷயம் எதுவானாலும், எல்லா விவசாயிகளும் ஒருங்கே கேட்டு பலனடையத் தக்கமுறையில் உபயோகப்படுத்தக்கூடும்.

தமிழ்நாட்டில் பஞ்சாயத்து வானொலிப் பெட்டிகள் சுமார் 15,000 இருந்தபோதிலும் 600 கிராம வானொலி மன்றங்கள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. இது மிக மிகக் குறைவு என்பதைக் கூறவும் வேண்டியதில்லை. பல்வேறு பகுதிகளின் விவசாய தேவைகளுக்கேற்ப ஒலிபரப்பு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இதனை உங்கள் விருப்பத்திற்கிணங்க விரிவுபடுத்தவும் முடியும். விவசாயத் துறையின் பல்வேறு பிரிவுகளிலுள்ள பயிர் நிபுணர்களும், சாகுபடியில் சாதனைகள் புரிந்துள்ள உங்களில் சிலரும் வேளாண்மையில் பல அரிய விஷயங்கள் பற்றி உங்களுடன் வானொலி மூலம் பேசி வருகிறார்கள். இவை விழலுக்கிறைத்த நீராகப் போகாதபடி செய்ய வேண்டியது உங்கள் கடமை. பிரதி மாலையும் 7-30 மணி முதல் 8 மணி வரை ஒலிபரப்பப்படும் விவசாய நிகழ்ச்சிகளைத் தவறாமல் கேட்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென உங்களை மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறேன். ''வானொலி'' மலரில் விவசாய நிகழ்ச்சிகளைப் பற்றிய தகவல் இப்போது கொடுக்கப்பட்டு வருவதை நீங்கள் கவனித்திருப்பீர்களென்று எண்ணுகிறேன்.

விவசாய நிகழ்ச்சிகளில் இப்போது இன்னொரு அம்சமும் சேர்க்கப்பட்டுள்ளது. திடீரென்று ஏற்படும் சீதோஷ்ண நிலை மாறுதல்களின்போது நீங்கள் என்னசெய்ய வேண்டுமென்பதை வானிலை அறிக்கையோடு ஒரு முக்கிய அறிவிப்பாகக் கூறப்பட்டு வருகின்றது. இது உங்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்குமென்று எண்ணுகிறேன்.

மார்க்கம் எதுவானாலும் குறிக்கோள் ஒன்றே. விவசாய உற்பத்தியில் முழுமூச்சுடன் ஈடுபட்டு ஒரு சென்ட் நிலத்தையும் தரிசாக விடாமல் முன்னேற்ற முறைகளை அனுசரித்து பயிர்களின் விளைவைப் பல மடங்கு பெருக்க வேண்டும். இம்முயற்சியில் விவசாய வானொலி நிகழ்ச்சிகளை நீங்கள் அதிக அளவில் பயன்படுத்திக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அவ்வப்போது உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.

உங்கள் சேவையைப் பெரும் பேறாகக் கருதும்,
ஜே. எப். ஜார்ஜ்,
வானொலி விவசாய அலுவலர்,
36-பி மவுண்ட் ரோடு,
சென்னை-2.

முந்திரி சாகுபடி

[ஸ்ரீ எம். ஏ. அழகிரிசாமி, பி.எஸ்ஸி. (விவசாயம்), முந்திரிப் பயிர் தனி மாவட்ட அலுவலர் அவர்களின் 28-10-1966-ந் தேதிய உரையின் சுருக்கம்.]

முந்திரி கடற்கரை ஓரங்களில் மணற்பாங்கான நிலங்களில் செழித்து வளரும். செங்கற்சரளை போன்ற நிலங்களிலும் இதைப் பயிர் செய்யலாம்; வறட்சியைத் தாங்கி வளரும் சக்தியுடையது. தரிசாக கிடக்கும் வளம் குன்றிய நிலங்களிலும் சிறிதளவு முயற்சியுடன் சாகுபடி செய்தாலும் முந்திரி நல்ல பலன் தரும்.

பருவ மழைக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே நிலத்தைத் தயார் செய்ய வேண்டும். சுமார் 2 அடி நீளம் 2 அடி அகலம் 2 அடி ஆழமுள்ள குழிகளை 20 அடி இடைவெளியில் தோண்ட வேண்டும். அக்குழிகளில் சாணம் சாம்பல் கலந்த நல்ல செவ்வல் மண்ணை நிரப்பி ஒரு மாதம் ஆறப்போட வேண்டும். வளமான மரத்தில் விளைந்த பொறுக்கு விதைகளை சாணம் கலந்த நீரில் $1\frac{1}{2}$ நாள் ஊற வைக்க வேண்டும். ஒவ்வொரு குழியின்

மத்தியிலும் இரண்டு விதைகளை ஊன்ற வேண்டும். விதைகளை காம்புப் பக்கம் மேல் நோக்கி நடுவதால், விதைகள் நேராக நன்றாய் முளைக்கும். நட்டபின் சுமார் 20 நாட்களில் முளைகள் வெளியே தெரியும். ஒரு மாதத்திற்குப் பின் நன்றாக வளர்ந்த செடியை குழிக்கு ஒன்று வீதம் வைத்துக் கொள்ள வேண்டும். மீதச் செடிகளை பயிர் வளராத குழிகளில் நடலாம். செடிகளை சூரிய வெப்பத்திலிருந்து பாதுகாப்பதற்கு பனை ஓலைகளை கிழக்கு மேற்காக வைக்க வேண்டும். செடிகளை அணில், எலி முதலியவைகள் நாசம் செய்யாமலிருக்க மூங்கில் கூடைகளிலும், பிளாஸ்டிக் பைகளிலும் மேற்குறிப்பிடப்பட்ட முறைப்படி விதைத்து செடிகள் வளர்ந்த பின்னர் நடலாம். முளை கிளம்பும் முன்பும் பின்பும் மூன்று நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விட வேண்டும். ஒரு ஏக்கர் நிலத்தில் சுமார் 80 செடிகள் பயிரிடலாம். ஆடு, மாடு முதலிய வற்றால் செடிகள் அழிக்கப்படாமலிருப்பதற்கு சீமைக் கருவேல் கொடிகாப்புலி போன்ற விதைகளை நிலத்தைச் சுற்றிலும் விதைத்து வேலி போட்டுக் காத்தல் அவசியம். மரங்களைச் சுற்றி பாத்திகள் கட்டி வைத்தால் மழைநீர் தேங்கி நிலத்திற்குத் தேவையான ஈரம் கிடைக்கும். தோட்டத்தைப் பகுதிகளாகப் பிரித்து கரைகள் அமைப்பது மழைநீர் மேல் மண்ணை அடித்துக் கொண்டு போகாமல் காப்பதுடன் தண்ணீரையும் தேக்கப் பயன்படும்.

செடிகள் நட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பின்தான் முந்திரி பலன் தர ஆரம்பிக்கிறது. ஆகவே அந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாக பூக்கும் செடிகளிலிருந்து பூத்த பூக்களை அகற்றி விடவேண்டும். இளம் வயதிலே பூத்துக் காய்த்தால் நீண்ட காலம் பலன் கொடுக்காது. மேலும் காய்ப்பும், கொட்டைகளும் அதிகமாகவும் பெரியதாகவும் இருக்காது. முந்திரி நவம்பர் முதல் பிப்ரவரி வரை பூக்கும். இதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே ஏக்கருக்கு சுமார் 10 வண்டி தொழு உரமோ, கம்போஸ்ட் உரமோ போட்டு, கொத்தி, நன்கு உழுதுவிட்டால் நல்ல பலன் கிடைக்கும். முந்திரிச் செடி பலன் கொடுக்க ஆரம்பிக்கும் வரை, செடிகளுக்கு இடையில் உள்ள வெளிகளில் உளுந்து பயிர் வகைகளும் இஞ்சி, மிளகாய், கேழ்வரகு, வரகு முதலிய பயிர்களும் சாகுபடி செய்யலாம். ஊடு பயிர்கள் செய்வதன் மூலம் மண் அரிப்பை தடுக்கலாம்; இவற்றிற்கு இடும் உரம் முந்திரிக்கும் பயன்படும். ஆகவே, முந்திரிக்கென தனியே உரம் அவசியமில்லை.

அடிமரத்தையும் வேர்களையும் துளை செய்யும். புழுக்களினால்தான் முந்திரி மரத்திற்கு பெரும் சேதம் ஏற்படுகிறது. இதைத் தடுக்க கிரியோசைட் எண்ணெயில் துவைத்த துணியினால் துவாரத்தின் வாயை அடைக்கலாம்.

இலைகளைத் தின்று செடிகளை நாசம் செய்யும் பூச்சிகளை ஒழிக்க 50 சத பி. எச். சி. மருந்தை ஒரு கிலோவுக்கு 250 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும். உச்சியிலிருந்து காய்ந்து அடிமரத்தை எட்டும் நோயும் முந்திரி மரத்தை பிடிக்கலாம். நோயினால் தாக்கப்பட்ட கிளைகளையும் கொப்புகளையும் அவ்வப்போது அப்புறப்படுத்த வேண்டும். நோய் பரவாமல் தடுக்க ஒரு சதம் போர்டோக் கலவையைத் தெளிக்க வேண்டும்.

முந்திரி சுமார் 40 ஆண்டுகள் முதல் 80 ஆண்டுகள் வரை பலன் தருகிறது. மகசூலின் அளவு இடத்திற்கு இடம் வேறு படலாம். நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் மரம் ஒன்றுக்கு சராசரி 10 கிலோவும், கீழ்க்கரைப் பகுதியில் 15 கிலோவும் முந்திரிக் கொட்டை கிடைக்கின்றன. நல்ல முறையில் பயிர் செய்தால் ஏக்கர் ஒன்றுக்கு வருடத்துக்கு 70 கிலோ கொண்ட மூட்டை 5 முதல் 10 வரை கிடைக்கும்.

முந்திரிக் கொட்டைகளை வறுக்கும்பொழுது எடுக்கப்படும் எண்ணெய் மீன் பிடிக்கும் வலைகள், படகுகளின் அடிப்பாகம் இவைகளில் பூச உபயோகமாகும். அவ்விதம் செய்தால் அப்பொருட்கள் பழுதடையாமல் இருக்கும். மேலும் வர்ணம், சாயம், கோந்து, மை முதலியன செய்யவும் பயன்படுகின்றது. பருப்பின் மீது ஒட்டிக் கொண்டிருக்கும் தோல் கோழிகளுக்கு நல்லது. முந்திரிப் பருப்பு சாக்லெட், பிஸ்கட், மிட்டாய் செய்ய உதவும். இது 'சி' வைட்டமின் நிறைந்தது. இதில் கரோடின் என்னும் உயிர்ச்சத்து உள்ளது. முந்திரி மரத்திலிருந்து கிடைக்கும் கோந்து புத்தகம் பைண்டு செய்ய உதவும். இது ஒரு கிருமிநாசினியுமாகும். வயிற்றோட்டத்திற்கு முந்திரிப் பட்டை கஷாயம் ஒரு மருந்து. முதிர்ந்த இலைகள் நெருப்புப்பட்ட புண்கள் ஆற்றப் பயன்படுகிறது. முதிர்ந்த மரம் படகுகள், பெட்டிகள் செய்ய உதவும். எல்லாவற்றுக்கும் மேலாக முந்திரி பருப்பு ஏற்றுமதியினால் நமக்கு அயல்நாட்டு செலாவணி கணிசமாகக் கிடைக்கிறது.

நம் மாகாணத்தில், முந்திரி அபிவிருத்தியைக் கவனிப்பதற்கு தஞ்சாவூரில், முந்திரி அபிவிருத்தி அதிகாரியும், கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு தனி மாவட்ட விவசாய அதிகாரியும், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் முந்திரி பயிரிடுவதை ஊக்கப்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள ஜில்லா விவசாய அதிகாரிகள் மூலம் விவசாயிகளுக்கு முந்திரி சாகுபடி செய்வதற்கு கடனுதவி அளிக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு ரூ. 80 வீதம் கடன் கொடுக்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ரூ. 2,000 வரை கடன் அளிக்கலாம். இந்த ரூபாயை விவசாயிகள் ஐந்து வருடம் கழித்து ஐந்து வருடத் தவணையில் $5\frac{1}{2}$ சத விகித வட்டியுடன் செலுத்த வேண்டும். ஆகவே, விவசாயப் பெருமக்கள் அரசாங்கத்தினரால் கொடுக்கப்படும் கடன் சலுகைகளைப பெற்று, முந்திரிப் பயிர் சாகுபடியை அபிவிருத்தி செய்து, நற்பலன் பெற்று, நாட்டின் வளத்தையும் பெருக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



தமிழ்நாட்டு வர்த்தகப் பயிர்களின் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் விற்பனை நிலைமைப்பற்றிய விவரங்கள்.

பருவநிலை

இம்மாதம் ஏறக்குறைய எல்லா மாவட்டங்களிலும் சமாராக மழை பெய்துள்ளது. தமிழ்நாட்டின் சில முக்கிய இடங்களில் பெய்த மழையின் அளவு சென்ற மாதத்திற்கும், இம் மாதத்திற்கும் ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வரிசை எண். (1)	இடத்தின் பெயர். (2)	செப்டம்பர், ஆகஸ்டு. (3) மழையின் அளவு (மில்லி மீட்டரில்).
1	கோவை	13
2	கடலூர்	366
3	கள்ளக்குறிச்சி	310
4	தூத்துக்குடி	4
5	பாளையங்கோட்டை	29
6	திருச்சி	171
7	திருப்பத்தூர்	119
8	வேலூர்	162

வர்த்தக நிலைமை

தமிழ்நாட்டில் உள்ள விற்பனைக் கூடங்களுக்கு வந்த பருத்தி, பஞ்சு, இவைகளின் விவரங்கள்.

அ. கோயம்புத்தூர் மார்க்கெட் கமிட்டி

கருங்கண்ணி பருத்தி

வரிசை எண். (1)	விற்பனைக்கூட பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனையானவை. (5)	இறுதி இருப்பு. (6)
			(குவிண்டாலில்.)		
1	திருப்பூர்	..	..	..	..
2	உடுமலைப்பேட்டை ..	40	30	70	..
3	தாராபுரம்	50	..	..	50
	மொத்தம் ..	90	30	70	50

கருங்கண்ணி பஞ்சு

1	திருப்பூர்	..	..	..	..
2	உடுமலைப்பேட்டை ..	120	25	140	5
	மொத்தம் ..	120	25	140	5

கம்போடியா பருத்தி

1	திருப்பூர்	20,083	14,064	20,082	13,465
2	தாராபுரம்	700	..	..	700
3	பொள்ளாச்சி	500	1,500	2,000	..
4	பெருந்துறை	1,075	..	..	1,075
5	சென்னிமலை	6,500	2,000	3,200	5,300
6	கோயம்புத்தூர் ..	7,500	2,400	3,000	6,900
7	புஞ்சை புளியம்பட்டி ..	3,320	4,250	5,200	2,370
8	அன்னூர்	3,000	..	..	3,000
9	உடுமலைப்பேட்டை ..	290	50	190	150
10	பல்லடம்	800	1,200	11,00	900
11	கோபி	100	100	100	100
	மொத்தம் ..	43,868	25,564	35,472	33,960

வரிசை எண். (1)	விற்பனைக்கூட பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4) (குவிண்டாலில்).	விற்பனையானவை. (5)	இறுதி இருப்பு. (6)
கம்போடியா பஞ்சு					
1	பொள்ளாச்சி	500	1,000	1,100	400
2	திருப்பூர்	26,761	9,002	16,926	18,837
3	உடுமலைப்பேட்டை ..	265	30	190	105
4	கோபி	50	55	50	55
5	ஈரோடு	1,130	600	400	1,330
6	சென்னிமலை	2,270	...	270	2,000
7	பெருந்துறை	435	...	...	435
8	கோயமுத்தூர் ..	5,000	2,200	2,200	5,000
9	புஞ்சை புளியம்பட்டி ..	2,500	3,050	2,690	2,860
10	பல்லடம்	500	350	450	400
11	அன்னூர்	200	..	...	200
	மொத்தம் ..	36,611	16,287	24,176	31,722

ஆ. இராமநாதபுரம் மார்க்கெட் கமிட்டி

கருங்கண்ணி பருத்தி					
	விருதுநகர்	950	2,000	2,000	950
கருங்கண்ணி பஞ்சு					
	விருதுநகர்	1,560	560	1,120	1,000
உகண்டா பருத்தி					
	இராசபாளையம்	3,250	8,000	8,000	3,000
உகண்டா பஞ்சு					
	இராசபாளையம்	2,000	2,240	1,240	3,000

வர்த்தக நிலைமை :

இம்மாதத்தில் பருத்தி, பஞ்சு விலைகள் ஸ்திரமான நிலையிலேயே இருந்தன. மாசிப்பட்டம் பருத்தி கோயமுத்தூர் மார்க்கெட் கமிட்டிக்கு கொண்டுவரப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டங்களில் பருவங்கள் முடிவுற்றபடியால் வரவுகள் சொற்பமாகவே காணப்பட்டது.

பருத்தி, பஞ்சு இரகங்களின் விலைகள்

இராமநாதபுரம் மார்க்கெட் கமிட்டி :

	விளைபொருள். (1)	முதல் ரகம். (2)	இரண்டாம் ரகம். (3) (விலை குவிண்டாலுக்கு.) ரூபாய்	மூன்றாம் ரகம். (4)
பருத்தி :	கருங்கண்ணி ..	150—165	150—165	115—135
	உகண்டா ..	200—240	140—180	100—125
பஞ்சு :	கருங்கண்ணி ..	408—436	370—380	350—360
	உகண்டா ..	..	..	..
பருத்தி விதை :	கருங்கண்ணி ..	66—76 } பொது.		
	உகண்டா ..	60—75 } பொது.		

கோயமுத்தூர் மார்க்கெட் கமிட்டி :

வரிசை எண். (1)	இடத்தின் பெயர். (2)	பருத்தி. கம்போடியா. (3)	பருத்தி. கருங்கண்ணி. (4)	பஞ்சு. கம்போடியா. (5)	பஞ்சு. கருங்கண்ணி. (6)
			(விலைகள் குவிண்டாலுக்கு.)		
1	திருப்பூர்	240	..	..	..
2	கோயமுத்தூர்	220	..	425	..
3	பொள்ளாச்சி	200	..	525-25	..
4	கோபி	225	..	465	..
5	அவினாசி	..	..	..	..
6	ஈரோடு	210	..	440	..
7	பெருந்துறை	..	..	..	..
8	அன்னூர்	..	..	..	..
9	உடுமலைப்பேட்டை	170	155	360	310
10	புஞ்சை புளியம்பட்டி	198	..	345	..
11	சென்னிமலை	210	..	440	..
12	பல்லடம்	200	..	490	..
13	தாராபுரம்	..	..	..	..

விலைபோக்கு

பருத்தி பருவம் முடிந்தமையால் வரவுகள் குறைந்து காணப்பட்டது. சேலம் மாவட்டத்திலிருந்து மாசிப்பட்டம் பருத்தி வந்துகொண்டிருப்பதால் விலைகள் ஸ்திரமாக காணப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வந்த நிலக்கடலை விவரங்கள்

வரிசை எண். (1)	மாவட்டத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனையானவை. (5)	இறுதி இருப்பு. (6)
			(குவிண்டாலில்.)		
முழுக் கடலை :					
1	வட ஆற்காடு	142·00	1,002·00	1,116·00	28·00
2	கோவை	9,094·00	61,325·00	59,215·00	11,204·00
3	இராமநாதபுரம்	..	..	..	..
4	தென்னாற்காடு	..	..	..	..
5	திருச்சி	..	..	..	..
மணிலா பயிர் :					
1	வட ஆற்காடு	5,768·40	288·00	620·00	5,336·40
2	திருச்சி	6,356·12	6,035·91	5,858·31	6,533·72
3	கோவை	5,625·00	21,270·00	17,690·00	9,205·00
4	இராமநாதபுரம்	600·00	2,000·00	2,000·00	600·00
5	தென்னாற்காடு	41,388·00	93,913·00	1,02,830·00	3,247·00

வர்த்தகப் போக்கு :

வட ஆற்காடு மாவட்டத்தில் இறைப்பு மணிலா பயிர் வரத்து சற்று காணப்பட்டது. மானாவாரி மணிலா வரத்து ஒரு சில இடங்களில் ஆரம்பம் ஆகியுள்ளது. புதிய மணிலா வரத்துக் காரணமாக விலையும் சற்று குறைந்து காணப்பட்டது.

தென்னாற்காடு மாவட்டத்தில் மணிலா பயிர் வரத்துக்கள் குறைந்தது. மணிலா நிலவரம் ஸ்திரமற்ற போக்காக காணப்படுவதால் விற்பவர்களும் வாங்குபவர்களும் சிறிது கவனமாகவே காணப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டின் விற்பனைக் கூடங்களில் நிலக்கடலை, நிலக்கடலைப் பருப்பு, எண்ணெய், பிண்ணாக்கு இவைகளின் விலை அளவு.

விளைபொருள். (1)	இராமநாதபுரம். (2)	தென்னாற்காடு. (3)	கோவை. (4)	திருச்சி. (5)	வட ஆற்காடு. (6)
			[குவிண்டாலுக்கு (விலை ரூபாயில்)]		
நிலக்கடலை	..	..	104—140	..	80—113
நிலக்கடலை பருப்பு	175—194	176—191	150—200	200—249	110—212
எண்ணெய்	482—490	..	..	..	..
பிண்ணாக்கு	56—57	..	..	..	..

வியாபார போக்கு

சென்ற மாதத்தில் இருந்ததைவிட இம்மாதத்தில் நிலக்கடலை விலை குறைந்துள்ளது. எண்ணெய் விலை குறைந்ததால் மேலும் நிலக்கடலை காய் பருப்பு விலையும் குறைந்துவிட்டது.

தமிழ்நாட்டில் எள்—ஆகஸ்ட் மாதத்திய கொள்முதல் விற்பனை விவரம்.

(எடை அளவு குவிண்டாலில்).

1	தென்னாற்காடு	5,945·00	7,619·00	9,094·00	4,470·00
2	திருச்சி	1,627·93	218·97	167.97	1,668·93

கோவை மாவட்டத்தில் முக்கியமான விற்பனைக் கூடங்களுக்கு விற்பனைக்கு வந்த புகையிலையின் அளவு

வரிசை எண். (1)	விற்பனைக்கூடங்களின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனை ஆனவை. (5) (குவிண்டாலில்.)	இறுதி இருப்பு. (6)
1	பொள்ளாச்சி	430	206	100	530
2	கோப்பனூர் புதூர்	1,575	750	900	1,425
3	கோபி	800	500	300	1,000
4	திருப்பூர்	13,800	..	..	13,800
5	புஞ்சை புளியம்பட்டி	3,645	15,630	13,340	5,835
6	ஒலகடம்	30,600	10,400	1,000	40,000
7	ஈரோடு	2,730	..	183	2,547
8	சித்தோடு	2,115	10	115	2,010
9	காரமடை	13,000	..	..	13,000
10	பல்லடம்	8,000	1,500	1,000	8,500
11	கோயமுத்தூர்	250	400	300	350
12	கொடுமுடி	595	..	40	555
13	தாராபுரம்	1,000	1,250	1,050	1,200
14	பெருந்துரை	185	..	..	185
15	உடுமலைப்பேட்டை	160	60	90	130
	மொத்தம்	78,885	30,700	18,418	91,167

புகையிலை வகைகளின் விலை விவரங்கள்

வரிசை எண். (1)	விற்பனைக் கூடத்தின் பெயர். (2)	முதல் தரம். (3)	இரண்டாம் தரம். (4) (குவிண்டாலுக்கு விலை ரூபாயில்).	மூன்றும் தரம். (5)
வாய்ப்புகையிலை (மீனம்பாளையம்)				
1	கோயம்புத்தூர்	300	200	100
2	கோபி	500	410	200
ஜாப்னு				
3	பல்லடம்	500	300	150
வாப்புகையிலை				
1	பொள்ளாச்சி	191	170	130
2	ஈரோடு	270	249	229
3	கோயமுத்தூர்	300	200	100
சுருட்டுப் புகையிலை				
	ஈரோடு	224	183	147
குழிப் புகையிலை				
	பல்லடம்	200	100	50

வியாபார போக்கு.

புகையிலை மார்க்கெட் நிலவரம் சென்ற மாதத்தில் இருந்தது போலவே நடப்பு மாதத்திலும் தொடர்ந்து ஸ்திரமாக உள்ளது. மைசூர், ஆந்திரா, கேரளா மாகாணங்களுக்கும் சென்னை மாகாணத்தில் திருச்சி, மதுரை, சேலம் மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டது.

காய்கறிப்
பயிர்களுக்குப்
புரட்சிகரமான புதிய
பாதுகாப்பு!

ரோகோர்®

பாரதத்தில் தயாராகும்
பயிர் ஜீவாணுவில்

ஊடுருவிப்பாயும் முதல் பூச்சிமருந்து

ரோகோர் பலவகைப் பயிர்களுக்குப் புரட்சிகரமான விதத்தில் பாதுகாப்பு அளிக்கும் ஒரு புதிய முறையாகும். இலைகளாலும், வேர்களாலும் அது உறிஞ்சப்பட்டு, தாவரத்தின் உயிர்ச்சாறுடன் கலந்து, தாவரத்தின் எல்லாப் பாகங்களிலும் இரண்டு வாரங்களுக்குப் பரவுகிறது. அச் சமயத்தில் பயிரின் உயிர்ச் சாற்றைக் குடிக்கும் எந்தப் பூச்சியும் இறந்து விடுகிறது. ரோகோர் பத்திரமான பூச்சி மருந்தாகும்-மனித இனத்துக்கு ஆபத்தற்றது.

இந்திய விவசாயிகளுக்குப் பலவகை சக்தி மிகுந்த பூச்சி மருந்துகளை வினியோகித்து விவசாயிகளின் நன் மதிப்பைப் பெற்ற டாடா பைஸன் இண்டஸ்ட்ரீஸ் ஸ்தாபனம் பாரதத்திலேயே ரோகோர் தயாரிப்பதற்காக ஒரு புதிய தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளார்கள்.

உங்கள் காய்கறிப் பயிரின் மேல் பாரதத்தில் தயாராகும் பயிர் ஜீவாணுவில் ஊடுருவிப் பாயும் முதல் பூச்சி மருந்தான ரோகோர் உபயோகியுங்கள். அமோகமான, உயர்ந்த விளைச்சலை உறுதி செய்யுங்கள்.

ROGOR®

இத்தாலி, மிலானிலுள்ள மான்டிகேடினி நிறுவனத்தால் ரிஜிஸ்தர் செய்யப் பட்ட ட்ரேட் மார்க்® ரோகோர்.

டாடா பைஸன்
தயாரிப்பு

TATA FISON RALLIS

டாடா பைஸன் ராலீஸ்

தமிழ்நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் திட்டங்கள்

அ. ஆ. 204/66—26—8—66

தமிழ்நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் பஞ்சாயத்து யூனியன்களில் செயல் படுத்த வேண்டிய விவசாயத் திட்டங்கள் பற்றி அரசினர் ஆணை பிறப்பித்துள்ளனர். கிராம நல நிர்வாகத்துறையின் 26-8-66ந் தேதிய ஆணை எண் 2064. நடைமுறை கோட்பாடுகள், விளக்கங்கள் பற்றிய அடிப்படை அறிவுரைகள் கொண்ட இந்த ஆணை பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட அலுவலகங்களில் பணிபுரியும் யாவர்க்கும் மிகவும் பயனுடையது. அவர்களின் உதவிக்காக முக்கிய மாக வேண்டிய பகுதிகள் மட்டும் அப்படியே இங்கு பிரசுரிக்கப்படுகின்றன.

இந்த ஆணையின் தமிழாக்கம் 1966 அக்டோபர் மாத 'கிராமநலம்' பத்திரிகையில் முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சென்ற மாதத்தின் தொடர்ச்சி

பி. விருப்பத் திட்டங்கள் (OPTIONAL SCHEMES).

வரிசை எண்ணும் திட்டத்தின் விவரமும். (1)	அரசாங்க மானியம். (2)	செலவுக்கு வரையறை (அரசாங்கமானியமும், பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்துக்களின் பங்குத் தொகையும் சேர்த்து.) (3)	குறிப்புகள். (4)
	ரூ.	ரூ.	
1. பஞ்சாயத்துகளுக்கு விவசாயக கருவிகள் வழங்கல்.	750	1,500	கிராமப் பஞ்சாயத்துக்களால் செயல்படுத்தப்பட வேண்டும். கருவிகளின் விலையில் 50 சதவிகித அளவை பஞ்சாயத்துக்கள் அளிக்க வேண்டும்.
2. பஞ்சாயத்துக்களில் வைக்கப்பட்டுள்ள கருவிகளைப் புதுப்பித்தலும் பராமரித்தலும்.	500	1,000	கிராமப் பஞ்சாயத்துக்களால் செயல்படுத்தப்பட வேண்டும். அதற்கான செலவில் 50 சதவிகித அளவை, பஞ்சாயத்துக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
3. பழவிதைகள், காய்கறி விதைகளை தனிப்பட்டவர்களுக்கு விநியோகம் செய்தல்.	2,000	2,000	தென்னம் பிள்ளைகளையும் சேர்த்து, பழவிதைகளை 25 சதவிகித குறைந்த விலையிலும், 50 சதவிகித குறைந்த விலையில் காய்கறி விதைகளையும் விநியோகம் செய்வதற்காக.
4. விசையினால் இயங்குவதும், பெரிய கனரகக் கருவிகளும் தவிர, மற்ற கருவிகளை பஞ்சாயத்து யூனியன்கள் வாங்குதல்.	750	1,500	தரமான விவசாயக் கருவிகளை, வட்டாரத் தலைமையிடத்திற்கும், கிராம, சேவக்குகளுக்கும் வாங்குவதற்காக.
5. பஞ்சாயத்து யூனியன்களுக்கு கருவிகள்—விசையினால் இயங்குபவை போன்றவை.	7,000	14,000	ஒன்று அல்லது இரண்டு (Knapsack) விசைத் தெளிப்பான்களும், ஒரு Calyx இயந்திர 'டிரில்லும்' அல்லது கையால் இயங்கும் "போரிங்" இயந்திரமும் வாங்க.

வரிசை எண்ணும் திட்டத்தின் விவரமும். (1)	அரசாங்க மானியம். (2)	செலவுக்கு வரையறை (அரசாங்க மானியமும், பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்துக்களின் பங்குத் தொகையும் சேர்த்து.) (3)	குறிப்புகள். (4)
பி. விருப்பத் திட்டங்கள் (OPTIONAL SCHEMES)—தொடர்ச்சி.			
6. கருவிகளைப் பாதுகாக்க பொதுவான இடம்.	5,000	10,000	செலவில் 50 சதவிகிதத்தை சம்பந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இரண்டு கூடங்களைக் கட்டவும், அவற்றிற்கு வேண்டிய உபகரணங்களை வாங்கவும்.
7. பஞ்சாயத்து யூனியன்கள் தோட்டங்கள் ஏற்படுத்துதல்.	2,500	5,000	பஞ்சாயத்து யூனியன் தோட்டங்களில் பயிரிட ஒரு கிணறு தோண்டி, ஒரு பம்பு செட்டு பொருத்துவதற்காக.
8. விஸ்தரிப்பு உதவிகள்-கண்காட்சிகள்-போட்டிகள் நடத்துதல்.	1,250	2,500	பொருட்காட்சிகள், போட்டிகள் நடத்துதல்; பயிர்ப்பாதுகாப்பு முறைகள் பற்றி சிறு வெளியீடுகள் அச்சடித்து, விநியோகம் செய்தல்.
9. இனவிருத்தி செய்யும் காளைகளை தனிப்பட்டோருக்கு விநியோகம் செய்தல்.	7,500	7,500	இனவிருத்தி செய்யும் காளைகளுக்காகும் செலவில் 50 சதவிகிதத்தைச் சமாளிக்க; அதனால் பயன்பெறுவோர் மிச்ச 50 சதவிகிதத்தைத் தர வேண்டும்.
10. தீவன அபிவிருத்தித் திட்டம்-பாசனம் பெற்று எப்பொழுதும் வளரக் கூடிய புல்வகைகள், செடி வகைகள்.	5,000	5,000	அப்படிப் பயிரிடும் ஒரு செண்ட் நிலத்திற்கு இரண்டு ரூபாய் வீதம் பயிரிடுவோருக்கு முழு மானியம் அளிக்க.
11. மாட்டுக் கொட்டகை கட்டுதல்.	7,500	7,500	தனிப்பட்டோருக்கும், பஞ்சாயத்துகளுக்கும் ஒரு கொட்டகைக்கு 150 ரூபாய்க்கு மேற்படாத முறையில், 25 சதவிகித குறைந்த விலையில் அளிப்பதற்காக.
12. செம்மறியாடுகள் விநியோகித்தல்.	1,500	1,500	ஒரு மிருகத்திற்கு 15 ரூபாய் என்ற குறைந்த அளவில் பஞ்சாயத்துக்கள் தேர்ந்தெடுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கு செம்மறியாடுகள் வழங்க.
13. பரிவர்த்தனை முறையில் சேவல் குஞ்சுகளை விநியோகம் செய்தல்.	1,500	1,500	உள்ளூர் சேவல் குஞ்சுகளுக்குப் பதிலாக, இனவிருத்தி செய்யக்கூடிய சேவல் குஞ்சுகள் பரிவர்த்தனை செய்யும் செலவைச் சமாளிக்க.
14. தனிப்பட்ட முறையில் கோழிப் பண்ணை வளர்ப்போருக்கு நிதி உதவி.	7,500	7,500	ஒரு கோழிப்பண்ணை ஏற்படுத்த ஒரு நபருக்கு 500 ரூபாய்க்கும் மேற்படாத அளவில் 50 சதவிகித நிதி உதவி அளித்தல்.
15. கிராமப் பஞ்சாயத்துக்களில் கோழிப் பண்ணைகள் ஏற்படுத்துதல்.	2,000	4,000	ஒரு கிராமக் கோழிப்பண்ணைக்கு வரையறை ரூ. 2,000 ஆகும். மொத்தச் செலவில் 50 சதவிகிதத்தை கிராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
16, ஆண் பன்றிகள் விநியோகம் செய்தல்.	2,000	2,000	ஒரு மிருகத்திற்கு 10 ரூபாய் என்ற குறைந்த விலையில், கிராமப் பஞ்சாயத்துக்கள் தேர்ந்தெடுக்கும் தனிப்பட்டோருக்கு.
17. மீனளம்.	..	..	அனுமதிக்கப்பட்ட வேலைத் திட்டங்களின் பட்டியலும் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றியும் உத்தரவுகள் தனியாகத் தெரிவிக்கப்படும்.
மொத்தம் ..	54,250	74,000	
சி. சிறப்புத் திட்டங்கள்			
பிரதேசத்திற்கான சிறப்புத் திட்டங்கள்	..	40,000	பிரதேசத்தின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்கான சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த.
மொத்தம் ..	..	40,000	

இணைப்பு II

இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு உற்பத்தித் திட்டங்களை உருவாக்கி நடத்துவது பற்றிய அறிவிப்புகள்

இன்றியமையாத் திட்டங்கள்

பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்களில் பஞ்சாயத்துத் தோட்டங்களை ஏற்படுத்திப் பராமரித்தல்.—பழமரங்கள், விறகுக்கான மரங்கள், தீவனத்திற்கு வேண்டியவை, பசுந்தாள் உரத்திற்கான மரங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துதலே, இத்திட்டத்தின் நோக்கமாகும். பஞ்சாயத்துத் தோட்டங்களை ஏற்படுத்தி அவைகளைப் பராமரிப்பதற்கான மீளும் இனச் செலவுகள், மீளா இனச்செலவுகள் ஆகிய இரண்டையும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளிலிருந்தே சமாளித்துக் கொள்ளலாம். மரங்கள் வைத்ததிலிருந்து மூன்றுண்டுக் காலம் வரைக்குத்தான் பராமரிப்புச் செலவுகளைச் செய்ய லாம். தென்னஞ்செடிகளுக்கு மட்டும், கலெக்டர்களின் உத்தேசப்படி 5 ஆண்டுகளுக்கு பராமரிப்புச் செலவு செய்யலாம். 1964-65, 1965-66-ம் ஆண்டுகளில் வைக்கப் பட்டுள்ள மரச் செடிகளுக்குக்கூட குறிப்பிட்ட மூன்று ஆண்டு காலத்திற்காக அளிக்கப்படும் இந்த நிதி உதவியைச் செய்யலாம். மொத்தம் 30 ஆயிரம் ரூபாயில், பத்தாயிரம் ரூபாயை புதிய, பழைய தோட்டங்களைப் பராமரிப்பதற்காக ஒதுக்கி செலவு செய்யலாம். இந்தத் திட்டத்தை ஒட்டி ஏற்படும் பல்வேறு செலவினங்களை ஒழுங்குபடுத்துவதற்கான படிவங்கள் (Forms) தனியாக அனுப்பப்படுகின்றன.

2. விவசாய டெப்போ—கிடங்குகள் கட்டுதல்.—எல்லா விவசாய சம்பந்தமான பொருள்களை விநியோகம் செய்வதற்கு கேந்திரமாகத் திகழ்வது விவசாய டிப்போ தான். ஆனால், தற்பொழுது, அநேகமாக எல்லா வட்டாரங்களிலும், இந்த டிப்போக்கள் அரசாங்கத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் இருந்தாலும் சரி, அல்லது அவை வாடகைக் கட்டிடமானாலும் சரி, விதைகள், கிருமிநாசினிகள் மற்ற இதுபோன்ற பொருள்களை தகுந்த முறையில் "ஸ்டோர்" செய்வதற்கு ஏற்ற போதிய இடவசதி படைத்தனவாக இல்லை. நல்ல முறையில் இதற்கான டிப்போ கட்ட, கட்டிடங்கள் கட்டுவதற்குத்தான் இதற்காக நிதிவசதி செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்த விவசாய டிப்போ கட்டுவதில் கீழ்க்கண்ட வரிசைக் கிரமத்தை அனுசரிக்கவேண்டும்:—

(அ) இப்பொழுதுள்ள டிப்போ வாடகைக் கட்டிடத்தில் இருந்தாலும், அல்லது இப்பொழுதுள்ள இடவசதி போதியதாக இல்லாமல் இருந்தாலும், அதற்குப் பதிலாக ஒரு பிரதான டிப்போ கட்டுதல் ;

(ஆ) வட்டாரத் தலைமை பீடத்தில், தேவை என்று கருதப்பட்டால் கூடுதலாக ஒன்று (அதாவது இரண்டாவது) டிப்போ—கிடங்கு கட்டுதல்.

(இ) தேவையாக இருந்தால், சிறு டிப்போக்கள் கட்டுதல். இந்தத் திட்டத்தை உருவாக்கும்பொழுது, கருத்தில் கொள்ளவேண்டிய விதிமுறைகள் வருமாறு:—

(1) அனுமதியளிக்கப்பட்டுள்ள மாதிரி கட்டிட அமைப்புப்படிதான் கட்டிடங்கள் கட்டவேண்டும். இந்த மாதிரி அமைப்புமுறை முன்பே எல்லா கலெக்டர்களுக்கும் கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தின் 12—2—1966 தேதியிட்ட எண் 92859/65 ஜி-2-ல் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(2) பஞ்சாயத்து யூனியன் தலைமை அலுவலகம் உள்ள ஊரில்தான் பிரதான டிப்போவை கட்டப் படவேண்டும்.

(3) விவசாய டிப்போக்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் முன்பே இயங்கிவரும் இடங்களில், மேற்கொண்டும் கூடுதலாக ஒரு விவசாய டிப்போ—கிடங்கு கட்டும் வேலை தொடங்கு முன்பாகவே, அப்படிக் கட்டலாம் என்பதற்கு மாவட்டக் கலெக்டர் அங்கீகாரம் அளித்திருக்கவேண்டும்.

3. கிராம சகாயக் பணி.—மூன்றுவது திட்டக்காலத்தில் என்ன நடைமுறை கையாளப்பட்டு வந்ததோ அதே நடைமுறைதான் இந்த ஆண்டும் இக் கிராம சகாயக் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்துவதில் கையாளப் படவேண்டும். பொறுக்கு விதைகளை விநியோகம் செய்வதற்காக, கிராம சகாயக்குக்கு குவிண்டால் ஒன்றுக்கு 5 ரூபாய் என்று நிதி உதவி அளிக்கப்படவேண்டும். இந்தச் செலவுக்கு இப்படி ஒரு நிர்ணயம் விதிப்பது, கீழ்க்கண்ட இடங்களுக்கு ஏற்றவாறு, அதாவது (அ) இந்த நிதி வசதியைப் பயன்படுத்திக்கொள்ள முடியாதவாறு உள்ள புஞ்செய் நிலங்கள் பகுதியிலும் (ஆ) கூடுதலாக நிதி உதவி தேவைப்படும் நஞ்செய் நிலங்கள் பகுதிகளிலும் சற்று மாறுபடும். நிர்ணயிக்கப் பட்டுள்ள இந்த விகிதத்தில் இப்படி சற்று மாறுதல் செய்யவேண்டியிருந்தால், அதை மாவட்டக் கலெக்டர், மாவட்ட விவசாய அதிகாரி ஆகியோருடன் கலந்தாலோசித்து (அ) கூடுதலாக உள்ள நிதியை மற்ற இன்றியமையாத அல்லது விருப்பத் திட்டங்களுக்கு மாற்றியும் (ஆ) முன்பே நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ. 40 ஆயிரத்தை கிராம வளர்ச்சி நெறியாளர் அனுமதிபெற்று பயன்படுத்திக் கொள்வதின் மூலமும் செய்யலாம்.

(தொடரும்)

1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திய காலநிலை அறிக்கை.

(சி. பாலசுப்ரமணியன், ரா. ஜானகிராமன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.)

இம்மாதம் 6, 14 தவிர ஏனைய நாட்களில் 9-ம் தேதி வரை இங்குமங்கும் மழையும், பிறகு 26-ம் தேதி வரை பல விடங்களில் மழையும், அதன்பின் 29-ம் தேதி வரை அநேக இடங்களில் மழையும், கடைசித் தேதியில் பரவலாகப் பல இடங்களில் மழையும் இருந்தது.

கால நிலையும் பயிர் வளர்ச்சியும்

இம்மாதம் சென்னை மாவட்டம் முழுவதும் அநேக இடங்களில் நல்ல மழை இருந்தது. இதனால் வடக்கில் செங்கற்பட்டு, வட ஆற்காடு முதலிய மாவட்டங்களில் சம்பா நடவும், வேர்க்கடலை, சோளம், கம்பு, கரும்பு முதலிய பயிர்களும் நலனுற்றன.

கீழ்க்கரை மாவட்டங்களான தென்னுற்காடு, தஞ்சை, இவற்றிலும் நல்ல மழை இருந்தது. இதனுல் குறுவை, சம்பா, தாளடி நெற்பயிர்களும், மானவாரி வேர்க்கடலை யும் நலனுற்றன.

மத்தியப் பிராந்தியத்தில் உள்ள சேலம், கோவை, திருச்சி மாவட்டங்களில் பெய்த மழையால் எல்லா மான வாரிப் பயிர்களும் நலனுற்றன. கோவையை அடுத்த பகுதிகளில் முன்பு விதைக்கப்படாத பூமிகளில் இம் மழையைக் கொண்டு கொள், கம்பு முதலியன விதைக்கப் பட்டன.

தென் மாவட்டங்களில் பெய்த மழை கார் நெல் அறுவடைக்குச் சற்று இடைஞ்சலாக இருந்த போதிலும், மானவாரிப் பயிர்களுக்கும், புதிய நெல் நாற்றுங் காலுக்கும் மிகுந்த பலனையளித்தது. மழையினுல் மா, சபோட்டா முதலிய பழ மரங்களில் சிறிது காய் உதிர் தல் ஏற்பட்டது. மாவில் சிறிது தத்துப் பூச்சியும், மரத் துளைப்பான்களும் ஏற்பட்டுத் தடுப்பு முறைகளைக் கையாள வேண்டியிருந்தது.

நீலகிரி மாவட்டத்தில் பெய்த மழை மலர்த் தோட்டங் களுக்கு நல்ல நன்மை செய்தது. ஆனுல் நஞ்ச நாடுப் பகுதிகளில் இம்மாதம் இரண்டாம் பகுதியில் பெய்த மழை போன பருவ உருளைக்கிழங்கு அறுவடையை பாதித்தது. உருளைக் கிழங்கில் சூரை நோய் இம்மாத இறுதியில் முதன் முதலாகக் கண்டது.

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
1	21—9—1966	நஞ்சைநாடு	94·5
2	25—9—1966	பட்டுக்கோட்டை	58.0
3	27—9—1966	கோயமுத்தூர்	56.0
4	27—9—1966	சென்னை	59·0
5	27—9—1966	திருர்க்குப்பம்	164.5
6	28—9—1966	சேலம்	61.6

பிராந்திய மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்).

வரிசை எண். (1)	பிராந்தியத்தின் பெயர். (2)	செப்டம்பர் மாத மழையளவு. (3)	சராசரியில் இருந்து மாறுபாடு. (4)	குறிப்பு. (5)
1	வட பிராந்தியம்	207·6	+54·6	சராசரிக்கு அதிகம்.
2	கீழ்க்கரைப் பிராந்தியம்	136·0	+16·4	சராசரிக்குச் சற்று அதிகம்.
3	மத்தியப் பிராந்தியம்	166·1	+80·5	சராசரிக்கு மிக அதிகம்.
4	தென் பிராந்தியம்	112·3	+55·1	சராசரிக்கு அதிகம்.
5	மலைப் பிராந்தியம்	211·6	+79·8	சராரிக்கு மிக அதிகம்.

தென்னிந்திய சீதோஷ்ணத்துக்குத் தக்கபடி நன்கு பரீக்ஷிக்கப்பட்டு எங்களால் நேரிடையாகத் தயாரிக்கப்பட்ட பலவித உயர்ந்த ஜாதி

முட்டைகோஸ், நூல்கோல், பீட்ரூட், கேரட், காலிப்ளவர், குடமிளகாய்

உலகப் பிரசித்திப்பெற்ற சிறந்த ருசி, குறைந்த விதைக்குழி, பருத்த சதை கொண்ட பலவித கவர்ச்சிகரமான

தக்காளி

மற்றும் இதர வெளிநாட்டு காய்கறி விதைகள், எக்காலத்துக்கும் தகுதியான நோய் அணுகாத, அதிக மகசூல் தரும் மிக உயர்ந்த ஜாதி பச்சை நிற

வெண்டை

பெரிய, சதை பருத்த, ருசிகரமான அதிசய ஜாதி

கொத்தவரை

அதிக மகசூல், சிறந்த ருசி, கவர்ச்சி நிறம், வடிவம், குறைந்த விதை முதலிய பல விசேஷ குணங்கள் கொண்ட

கத்தரி ரகங்கள்

இதர பலவித முள்ளங்கி, மிளகாய், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி, கீரை வகைகள், மா, எலுமிச்சை, கொய்யா, சபோடா போன்ற பழச் செடிகள், தென்னை ரகங்கள், பூச்சி மருந்துகள், தோட்டக் கருவிகள், ஸ்ப்ரேயர்கள், களை நாசினிகள் முதலிய எல்லாவற்றுக்கும் சிறந்த நம்பிக்கை வாய்ந்த இடம்:

ராஜா பண்ணைத் தோட்டம்

2, வைத்தியராமய்யர் தெரு (ஹிந்தி பிரசாரசபை அருகில்), தியாகராயநகர் : : சென்னை-17.

தந்தி : RAJSEED

போன் : 42262

1966-ம் ஆண்டு செப்டம்பர் மாத காலநிலை அறிக்கை

மழை அளவு (மில்லிமீட்டர்களில்).

இடத்தின் பெயர்	இம்மாத மழை அளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து மொத்த மழை அளவு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்) ..	180·0	+71·1	702·0
திருர்குப்பம்*	291·9	+126·2	681·3
வேலூர்	160·0	—14·7	554·0
குடியாத்தம்*	198·3	+35·7	480·0
கீழ்க்கரைப் பிராந்தியம்			
பாலூர்*	85·6	—31·2	691·9
திண்டிவனம்*	167·1	+14·0	564·9
கடலூர்	107·0	—25·3	599·8
நாகப்பட்டினம்	70·0	—13·8	479·0
ஆடுதுறை*	133·3	— 8·1	656·3
பட்டுக்கோட்டை*	252·9	+162·6	700·9
மத்திய பிராந்தியம்			
சேலம்	284·0	+129·8	737·0
சேலம்*	266·4	+120·0	793·3
கோயமுத்தூர்*	133·3	+95·7	345·1
கோயமுத்தூர்	108·0	+67·6	278·0
ஆளியார் நகர்*	21·8	—12·2	189·0
திருச்சிராப்பள்ளி	183·0	+82·2	637·0
தென் பிராந்தியம்			
மதுரை	163·0	+ 43·6	664·0
பாம்பன்	97·0	+ 68·0	331·0
கோவில்பட்டி*	153·2	+ 32·0	389.1
பாளையங்கோட்டை	83·0	+ 51·8	241·0
அம்பாசமுத்திரம்*	64·3	+ 41·5	182·8
நாகர்கோயில்*	120·7	+ 71·6	273·1
கன்னியாகுமரி*	104·8	+ 77·4	247·0
மலைப் பிராந்தியம்			
கொடைக்கானல்	187·0	+ 2·1	803·0
கூனூர்*	74·7	— 30·5	753·4
உதகமண்டலம்*	260·3	+148·3	888·7
நஞ்சைநாடு*	324·4	+199·1	1022·2

* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

புரட்டாசிப் பட்டத்து பருத்தி விவசாயிகளுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு

விவசாய பெருமக்களே! உங்கள் புரட்டாசிப் பட்டத்து எம்.சி.யு. 1, எம்.சி.யு. 3, கே. 6 பருத்தி பயிரை பதிவு செய்யுங்கள். சான்று பெற்று உங்கள் பருத்திக்கு அதிக விலை பெறுங்கள்.

கவனிக்கவேண்டிய சில முக்கிய விதிகள்.

1. விதை.

எம்.சி.யு. 1, எம்.சி.யு. 3, கே. 6 பொறுக்கு விதைகளையே விதைக்க வேண்டும்.

2. விதை அளவு.

வரிசைக் கிரமமாக விதைக்கப்பட்டிருந்தால் அல்லது கையால் விதை நட்டிருந்தால் ஏக்கர் ஒன்றுக்கு 6 கி.கி. விதை விதைத்திருக்க வேண்டும்.

மற்ற முறைகளில் நடப்பட்டிருந்தால் (எம்.சி.யு. 1, எம்.சி.யு. 3) பருத்திப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 10 கி.கி.–க்குக் குறையாமல் விதை விதைக்க வேண்டும்.

கே. 6 (பாண்டியன்) பருத்திப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 7 கி.கிக்குக் குறையாமல் விதைக்க வேண்டும்.

3. விதைக்கும் காலம்.

எம். சி. யு. 1, எம். சி. யு. 3 ஆகஸ்ட் 1-ம் தேதிமுதல் டிசம்பர் 31-ம் தேதிக்குள் விதைக்க வேண்டும்.

கே. 6 (பாண்டியன்) பருத்திப் பயிரை செப்டம்பர் 15-ம் தேதிமுதல் டிசம்பர் 31-ம் தேதிக்குள் விதைத்திருக்க வேண்டும்.

4. பதிவுக் கட்டணம்.

எம்.சி.யு. 1, எம்.சி.யு 3 ஆகியபருத்திப் பயிர்களுக்கு பதிவுக் கட்டணம் ஏக்கர் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ. 1 50 பைசா.

கே. 6 (பாண்டியன்) பருத்திப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு 1 ரூபாய் மட்டும்.

5. பதிவுக் கால வரம்பு.

எம்.சி.யு. 1, எம்.சி.யு. 3 பருந்திப் பயிருக்கு செப்டம்பர் 15-ம் தேதிமுதல் டிசம்பர் 31-ம் தேதி முடிய கே. 6 (பாண்டியன்) பருத்திப் பயிருக்கு செப்டம்பர் 15-ம் தேதிமுதல் ஜனவரி 15-ம் தேதி முடிய.

6. விண்ணப்ப பாரத்துடன் விதை பில்லும் பதிவுக் கட்டணம் கட்டிய ரசீதும் சேர்த்து அனுப்ப வேண்டும். மற்றும் விவரங்களுக்கு இராஜபாளையத்திலுள்ள உயர்தரப் பருத்திச் சான்றுரை திட்ட அலுவலகத்தை அணுகவும்.

உடனே உங்கள் எம்.சி.யு. 1, எம்.சி.யு. 3, கே. 6 பருத்திப் பயிர்களை பதிவு செய்து பயன் பெறுங்கள்.

விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு, தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.



திரு. நைல்வெப்ஸ்டர், (போர்டு பௌண்டேஷன்) அவர்கள் செய்தி பரப்புதல் பற்றி உரையாற்றுதல்.



முதல் குழு ஆலோசனை—தீவிர மாவட்டத் திட்டம் பற்றி தலைவர் டாக்டர் **R. W.** வில்காக்ஸ்.

விவசாய முன்னணி அலுவலர்கள் மாநாட்டில் புதிய உயர்வளத் தானியங்களின் பல்வேறு பதார்த்தங்கள் செய்யும் முறை விளக்கம் மூன்று நாட்களும் ஊட்டச்சத்துத் திட்டப் பகுதியினரால் செய்து காட்டப்பட்டது. மக்காச்சோளத்தில் செய்த ஒரு இனிப்புப் பதார்த்தத்தைப் பெறுபவர் மாநில விவசாய நெறியாளர் திரு. **K. V.** ராமநாதன் அவர்கள்.

இரண்டாம் குழு ஆலோசனை—தீவிர மாவட்டப் பகுதித் திட்டங்கள் பற்றி தலைவர் டாக்டர் கார்ல் **C.** மலோன்.

மூன்றாம் குழு ஆலோசனை—கூட்டுறவு கடன், விற்பனை பற்றி தலைவர் டோரிஸ் டி. பிரௌன்.

Registered No. M·4646 1333/15.12.66/c

© தமிழ்நாடு அரசாங்கம், 1966



1966 அக்டோபர் மாதம் 10, 11, 12 ஆகிய தேதிகளில் தென் மாநிலங்களின் தீவிர விவசாயத் திட்டப் பகுதிகளின் முன்னணி அலுவலர்கள் மாநாடு சென்னை யில் நடைபெற்றது.

மாநாட்டை தொடக்கிவைத்து சென்னை மாநில விவசாய அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள் தொடக்க உரையாற்று கிறார்.



தென்மாநிலங்களின் தீவிர விவசாயத்திட்டப் பகுதிகளின் முன்னணி அலுவலர் மாநாடு மாநில அரசின் விவசாயத் துறைச் செயலாளர் திரு. வீ. கார்த்திகேயின் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

மத்திய அரசின் விரிவினைத் துறைக் கமிஷனர் திரு. டி. வி. ரெட்டி அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். மாநாடு ஆரம்பத்தில் தலைமையுரை யாற்றுதல் திரு. டி. வி. ரெட்டி அவர்கள்.



தென்மாநில தீவிர விவசாய திட்டங்களின் முன்னணி அலுவலர் மாநாட்டில் கலந்து கொண்ட தமிழகம், ஆந்திரம், மைசூர், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலப் பிரதிநிதிகள்.

(இன்னும் படங்கள் உள் பக்கத்தில்.)